வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 05.09.2023 செவ்வாய்க்கிழமை இதழ் : 269 பக்கங்கள் : 16




# 13 தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை!

## ஐக்கிய தேசியக் கட்சி தெரிவிப்பு



கொழும்பு, செப்ரெம்பர் 05

**இந்தியப் பிரதமருக்கும் - உள்நாட்டிலும் வழங்கிய உறுதிப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ் அதிகாரம் இல்லாது - ஏனைய அதிகாரங்களுடன் 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியாக உள்ளார். இந்த நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை.**

- இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் இருக்கும் சிலர் 13ஆம் திருத்தம் தொடர்பாக என்ன கருத்தைத் தெரிவித்தாலும் 13 தொடர்பாக ஜனாதிபதி அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது - என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அரசமைப்பின் 13ஆம் திருத்தம் இந்த நாட்டின் சட்டம். அதனால் 13ஐ செயல்படுத்துவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறார். 13ஆம் 11

# ஏ. எல். பரீட்சை பெறுபேறு நேற்று வெளியாகியது!

கொழும்பு, செப். 05

நேற்று வெளியான உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 63.3 வீதமானவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப் பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

2022 கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை (2023) பெறுபேறுகள் நேற்று பிற்பகல் வெளியாகின என்று பரீட்சைகள் ஆணையாளர் 11

யாழ். இந்துக் கல்லூரியில்

# கணித, விஞ்ஞான பிரிவில் 31 மாணவர்கள் 3 ஏ சித்தி!

பௌதிக, உயிரியல் விஞ்ஞான பாடங்களில் மாவட்டத்தில் முதல் 5 இடங்களை பிடித்தனர்

யாழ்ப்பாணம், செப். 05

நேற்று வெளியான உயர்தர பரீட்சை பெறுகளின் முடிவின்படி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பாடப் பிரிவுகளில் 31 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் ஏ சித்தி பெற்றுள்ளனர்.

அத்துடன், பௌதிக விஞ்ஞான பாடத்தில் 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:

# ராஜபக்ஷ குடும்பத்துக்கு நெருக்கமான அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர்!

லண்டன், செப். 05

உயிர்த்த ஞாயிறுதின குண்டு வெடிப்புகளுக்கு ராஜபக்ஷ குடும்பத்துக்கு நெருக்கமான இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் சனல் - 4 தொலைக் காட்சியில் இன்று செவ்வாய்க்கிழமை ஒளிபரப்பாகவுள்ள ஆவணப்படத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ராஜபக்ஷக்களை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்துவதற்காக 11

# சீரற்ற வானிலை மூவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 05

நாட்டில் நிலவும் கடும் மழை மற்றும் சீரற்ற வானிலையால் மூவர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

தென்னிலங்கையில் நேற்று முன்தினம் முதல் அதிக மழை வீழ்ச்சி பதிவாகி வருகின்றது. அத்துடன், 11

# பரு. ஹாட்லி கல்லூரியில் 14 மாணவர்கள் 3 ஏ சித்தி!

வடமராட்சி, செப். 05

உயர்தர பரீட்சையில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியை சேர்ந்த 14 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 3 ஏ சித்தி பெற்றுள்ளனர்.

உயர்தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியாகின. நேற்றிரவு வரையான முடிவுகளின்படி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியை சேர்ந்த 10 மாணவர்கள் பௌதிக விஞ்ஞான (கணிதம்) பாடத்தில் 3 ஏ சித்தி பெற்றனர்.

இதேபோன்று, உயிரியல் விஞ்ஞான பாடத்தில் மூன்று மாணவர்களும் வர்த்தக பிரிவில் ஒரு 11

# இலங்கையின் கடினமான காலத்தில் தேவை உணர்ந்து இந்தியா உதவியது

## பிரதமர் மோடி தெரிவிப்பு




புதுடில்லி, செப். 05

இலங்கை எதிர்கொண்ட கடினமான காலங்களில், அதன் தேவைகளை இந்தியா மிகவும் உணர்ந்து செயல்பட்டது என்று அந்த நாட்டின் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடன் நெருக்கடி உலகுக்கு - குறிப்பாக, வளர்ந்து வரும் நாடுகளுக்கு மிகுந்த 11

# தமிழர் தலைநகரில் விகாரைகளை அமைக்க ஒருபோதும் இடமளியோம்!

## இரா. சம்பந்தன் தெரிவிப்பு



கொழும்பு, செப். 05

தமிழர் தலைநகரான திருகோணமலையில் கண்ட கண்ட இடங்களில் பௌத்த விகாரைகளை நிறுவவும் - சட்டவிரோத சிங்கள குடியேற்றங்களை அமைக்கவும் பேரினவாதம் முயற்சிக்கின்றது. அவர்களின் இந்தச் சண்டித்தனத்துக்கு 11

# நீதிபதிகள் எடுக்கும் முடிவுகளை பாதுகாக்க நாம் முன்னிற்போம்!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

கொழும்பு, செப். 05

நீதிபதிகளால் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவுகளையும் பாதுகாப்பதற்காக மக்கள் பிரதிநிதிகளாக எதிர்க்கட்சி முன்னிற்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று விடுத்த விசேட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாட்டின் ஜனநாயகத்தை சீரழிக்கும் வகையில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டு வரும் தொடர் நடவடிக்கையை 11

# ஜனாதிபதிக்கு மிரட்டல் 19 வயது இளைஞர் கைது!

கொழும்பு, செப். 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் தனது சமூகவலைத்தளத்தில் பதிவிட்ட இளைஞர் ஒருவரை குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைதானவர் அநுராதபுரம் - எப்பாவல - மெடியாவ பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

எதிர்வரும் வியாழக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தம்புத்தேகம மற்றும் எப்பாவல பிரதேசங்களுக்கு செல்லவுள்ளார். இந்நிலையிலேயே, அந்த இளைஞர் மிரட்டல் விடுத்தார். இதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# மாணவர்களின் கைபேசி பாவனைக்கு கட்டுப்பாடு!

## விரைவில் வருகிறது சட்டம்

கொழும்பு, செப். 05

பாடசாலை மாணவர்களின் கைபேசி பாவனைக்கு கட்டுப்பாடு விதிப்பதற்கும் அது தொடர்பான சட்டகட்டமைப்பை தயாரிக்கவும் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

கைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சிறுவர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன. மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் சிறுவர்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

கடந்த வெள்ளியன்று இந்தப் பத்தியில் வடக்கில் போதை பாவனை பற்றி யாரும் இப்போது பேசாதது பற்றி குறிப்பிட்டிருந்தேன்.

அந்த விடயம் குறித்து அடுத்த பொலிஸ் மா அதிபர் பதவிக்கான போட்டியில் இருக்கும் ஒரு மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்திருந்த கருத்துகள் நேற்றுமுன்தினம் ஈழநாடுவில் வெளியாகியிருந்தது.

சுமார் நாற்பது ஆண்டுகளாக நாட்டில் போதைப் பொருளை ஒழிக்க பொலிஸார் தோல்வியடைந்துள்ளதாக மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளதாக சொல்கிறது அந்தச் செய்தி.

"போதைப்பொருளை ஒழிக்க முடியாமைக்கான காரணம் அதன் மூலம் கிடைக்கும் இலாபமே. இது ஒரு வணிகமாகும். இதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம். கஞ்சா மாத்திரைகள் இப்போது பாடசாலை மாணவர்களின் கைகளில். இதனை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகளின் கடமையாகும்.

கடந்த, எண்பத்து இரண்டாம் ஆண்டில் ஹெரோயினுடன் முதல் நபர் கைது செய்யப்பட்டார். அவர் ஒரு சுற்றுலா வழிகாட்டி. இன்று, ஒரு இலட்சத்து நாற்பதாயிரத்துக்கும் அதிகமான நகரங்கள், புறநகர் பகுதிகள், கிராமங்கள், கிராமப்புற சேவை பகுதிகளில் உள்ள பாடசாலை குழந்தைகளுக்கு போதைப்பொருள் பரவியுள்ளது. இதை நிறுத்த இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று விநியோகத்தை நிறுத்த வேண்டும். மற்றொன்று தேவையை நிறுத்த வேண்டும். அந்த விநியோக வலையமைப்பு முற்றிலும் அழிக்கப்பட வேண்டும். இதை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தடுத்து நிறுத்தவேண்டும்"

- இதுதான் அந்த பொலிஸ் அதிகாரி சொன்னவை.

அவர் சொல்ல வருவது, இது ஒரு பாரிய இலாபமீட்டும் வர்த்தகம் என்பதால் அதனால் பயனடையும் வர்த்தகர்கள் இதனை நிறுத்தப் போவதில்லை. அந்த விநியோக வலையமைப்பைத்தான் அழிக்கவேண்டும் - என்கிறார்.

இது தொடர்பாக வெள்ளியன்று எழுதிய அந்தப் பத்தியிலும், விநியோகத்தில் ஈடுபடும் ஒரு சிலர் அவ்வப்போது கைது செய்யப்படுகின்றனரே தவிர, இந்த வர்த்தகத்தில் ஈடுபடும் மிகப்பெரிய வர்த்தகர்கள், அதாவது பல கோடி ரூபாய்களை முதலிட்டு, பல கோடி ரூபாய்களை இலாபம் பார்க்கும் 'பெருமுதலைகள்' கண்டுகொள்ளப்படு வதில்லையே என்ற ஆதங்கத்தையே தெரிவித்திருந்தேன்.

பொலிஸ் அதிகாரியின் கவனமும் இந்த விநியோக வலையமைப்பிலும் அதனை பாவிக்கின்ற அதாவது போதைப்பொருள்களை வாங்கு கின்றவர்கள் மீதும்தான் இருக்கின்றதே தவிர, அந்த வர்த்தகர்கள் மீது அல்ல என்பதை அறியமுடிகின்றது.

சில தினங்களுக்கு முன்னர் நண்பர் ஒருவர் ஒரு சிங்கள இணையத்தளம் ஒன்றில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் கலந்துகொண்டிருந்தார். அவர் அடிப்படையில் ஒரு தீவிர இடதுசாரி.

அந்த விவாதத்தில் அவர் ஊழியர் சேமலாப நிதியில் அரசாங்கம் கைவைக்கவிருப்பது பற்றி தீவிரமாக தனது கண்டனத்தை பதிவுசெய்திருந்தார்.

நாடு எதிர்நோக்கும் கடன் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அதாவது, உள்நாட்டுக் கடன்களை சரிசெய்வதற்கு ஊழியர் சேமலாப நிதியிலிருந்து அந்தக் கடன்களை அரசு அடைக்கவிருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

அவ்வாறு அந்த நிதியிலிருந்து கடன் மீட்புக்காக அரசு எடுப்பது முப்பத்தி ஐந்து இலட்சம் தொழிலாளர்களின் வாழ்வோடு விளையாடுகின்ற செயல் என்று நண்பர் வாதிட்டிருந்தார்.

அவரிடம் கேட்டேன், ஒவ்வோர் ஆண்டும் வரவு - செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை சரிசெய்து, ஒரு வரவு - செலவு திட்டத்தையாவது கடன் எதுவும் பெறாமல் தயாரிக்க வேண்டுமெனில் வரிகளை அதிகமாக அறிவிடவேண்டும். செலவுகளைக் குறைக்கவேண்டும்.

வரியை கூட்டினாலும் போராட்டம் நடக்கின்றது. செலவைக் குறைப்பதெனில் அளவுக்கதிகமாக இருக்கும் அரச பணியாளர்களைக் குறைக்கவேண்டும். அதனைச் செய்தாலும் பணியாளர்கள் வீதிக்கு வந்துவிடுவார்கள்.

சரி, உள்நாட்டுக் கடனை அடைக்க ஊழியர் சேமலாப நிதியை பயன்படுத்தினால் அது எப்படி தொழிலாளர்களின் வாழ்வோடு விளையாடும்?

அவர்களின் பணம் வங்கியில் இருக்கின்றது. அவர்கள் அறுபத்தி ஐந்து வயதாகும் போது அவர்களுக்கு அது கிடைத்தால் போதுமானது தானே? இப்போது அதனை எடுக்காவிட்டால் அரசு வேறு யாரிடமாவது கடன்பெற வேண்டும். அதுவும் இந்த தொழிலாளர்கள் தலையில் மட்டுமல்ல ஒட்டுமொத்த சனங்களின் தலையில்தானே சுமத்தப்படும்?

அப்பாவிபோல நான் கேட்டபோது, அவர் திருப்பிக் கேட்டார். நீங்களே எழுதினீர்களே இந்த போதைவஸ்து கடத்தலில் ஈடுபடும் பெரிய முதலைகளை அரசு ஏன் கண்டு கொள்வதில்லை என்று. அதாவது பெரும் முதலாளிகள் தொடர்ந்து வரி செலுத்தாமல், சட்டவிரோதமாக சம்பாதிக்க அனுமதித்துக்கொண்டு அப்பாவிகள் மீது சுமையை போடுவது தவறானதுதானே?

இதற்கு என்னிடம் பதில் இருக்கவில்லை.

**- ஊர்க்குருவி.**

### நாடு முழுவதும் சைவ ஆலயங்கள்

# மக்கள் ஆதரவிலேயே கட்டப்பட்டன எதிர்ப்புகளுக்கு மத்தியில் அல்ல!

## ரெலோ கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 05

சைவ ஆலயங்கள் அங்குள்ள பக்தர்களால் மக்கள் ஆதரவுடன் உரிய அனுமதி பெற்று சட்டபூர்வமாக நாட்டு விதிமுறைகளை அனுசரித்து கட்டப்பட்டு - வணங்கப் பட்டு வருகின்றன. பொது மக்களின் காணிகளை அபகரித்தோ அல்லது தொல்லியலின் ஆதரவுடன் அரசு படைகளின் பாதுகாப்புடன் கட்டப்பட்டவை அல்ல.

- இவ்வாறு தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

25 மாவட்டங்களிலும் சைவ ஆலயங்கள் உள்ளன. 25 மாவட்டங்களிலும் பௌத்த விகாரைகளை ஏன் அமைக்கக் கூடாது என்று அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்திருந்தார். இதே கருத்தை விமல் வீரவன்ஸ், உதய கம்மன்பில போன்றோரும் வெளியிட்டிருந்தனர். இதற்கு கண்டனம் தெரிவித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

25 மாவட்டங்களிலும் இந்து ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளபோது பௌத்த விகாரைகளை வடக்கு - கிழக்கில் கட்டுவதற்கு எதற்கு தடை என்று கேள்வி எழுப்பி உள்ளனர் இனவாத, மதவாத மும்மூர்த்திகள்.

அனைத்து மாவட்டங்களிலும் சைவ ஆலயங்கள் அங்குள்ள பக்தர்களால் மக்கள் ஆதரவுடன் உரிய அனுமதி பெற்று சட்டபூர்வமாக நாட்டு விதிமுறைகளை அனுசரித்து கட்டப்பட்டு - வணங்கப் பட்டு வருகின்றன. பொது மக்களின் காணிகளை அபகரித்தோ அல்லது தொல்லியலின் ஆதரவுடன் அரசு படைகளின் பாதுகாப்புடன் கட்டப்பட்டவை அல்ல. பௌத்தத் துக்கோ - பௌத்த மதத் துக்கோ - புத்த பெருமானுக்கோ எதிரானவர்கள் அல்ல தமிழர்கள். மாறாக அவருடைய போதனைகளையும் மதிப்பவர்கள் தமிழ் மக்கள். இனவாத, மதவாத சக்திகள் இதை புரிந்து கொள்ள வேண்டும்.

பலாத்காரமாக மக்கள் காணிகளை அபகரித்து - பிரதேச மக்களின் எதிர்ப்புக்கும் போராட்டத்துக்கும் மத்தியில் சட்ட விரோதமாக பௌத்த விகாரைகள் அமைக்கின்ற நோக்கமே தவறானது. அந்த நோக்கத்தைத்தான் தமிழ் மக்கள் எதிர்க்கிறார்கள். தொல்லியல் என்ற போர்வையில் பௌத்த விகாரைகளை கட்டியெழுப்பி விட்டு மக்கள் காணிகளையும் அபகரித்து நீங்கள் செய்ய முற்படுவது என்ன?

நல்லிணக்கம் - புரிந்துணர்வு ஏற்படும் பட்சத்தில் எங்கெங்கு பௌத்த விகாரைகள் கட்டப்பட வேண்டும் என்பதை அங்கு வாழ்கின்ற மக்களே தீர்மானிப்பார்கள். நீங்கள் பலோத்காரமாக பௌத்த விகாரைகளை கட்ட வேண்டிய தேவை ஏற்படாது. தமிழ் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தாது இனவாத மதவாதங்களை வளர்த்துக்கொண்டு அந்த நோக்கங்களை நிறைவேற்ற விகாரைகளை கட்ட தமிழ் மக்கள் அனுமதிக்கவில்லை என்பதால் நீங்கள் கூப்பாடு போடுவதில் அர்த்தமில்லை.

உங்கள் மறைமுக ஆக்கிரமிப்பு நோக்கத்தை நிறைவேற்ற தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. சிங்கள மக்களும் அதற்கு ஆதரவு வழங்கப் போவதில்லை. உங்களைப் போன்ற ஒரு சிலர் நாட்டின் அமைதியை குலைத்து தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டி விடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதற்கு ஒருபோதும் நாட்டு மக்கள் இடமளிக்கப் போவதில்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. அறகலயவிலிருந்து - நீங்கள் பெற்ற பாடங்களில் இருந்து - நீங்கள் திருந்தவில்லை. விரைவில் நீங்கள் திருந்தும் காலம் வரும் - என்றார். (ஐ)

# 30 கோடி டொலர்களை வழங்குகிறது ஐ. நா.!

கொழும்பு, செப். 05

ஊழலை தடுப்பதற்கும் பாதீட்டு பணிமனையின் செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை புதிய ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக அடுத்த ஐந்து வருடங்களுக்கு 30 கோடி டொலர்களை வழங்க வுள்ளதாக ஐ. நாவின் வதிவிட பிரதிநிதி மார்க் அண்ட்ரே ப்ரான்ச்சே வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டமை, பாராளுமன்ற பாதீட்டு பணிமனை நிறுவப்பட்டமை தொடர்பில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு அவர் பாராட்டும் தெரிவித்தார். (ஐ)

# இந்தியாவின் போர் கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டது




கொழும்பு, செப். 05

இந்தியாவின் சுதேசிய தயாரிப்பான முதலாவது போர் கப்பலான 'ஐ. என்.எஸ். டில்லி' தனது பயணத்தை நிறைவுறுத்தி நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து புறப்பட்டது.

இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கடந்த சனிக்கிழமை ஐ.என்.எஸ். டெல்லி கப்பலில் விருந்துபசாரம் ஒன்றை நடத்தி இருந்தார்.

இந்த விருந்துபசாரத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த அதேவேளை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை ஆயுதப் படைகளின் தளபதிகள் மற்றும் ஏனைய பல்வேறு துறைகளை சேர்ந்தோரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கை அரசின் பயன்பாட்டுக்காக தயார் நிலையில் உள்ள மருத்துவ (ஆரோக்கிய மைத்ரி) தொகுதி ஒன்றும் உயர்ஸ்தானிகரால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய சபாநாயகர், குறித்த விசேட மருத்துவ தொகுதிக்காக இந்திய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்திருந்தார்.

இந்த நிகழ்வில் தனது கருத்துகளை முன்வைத்திருந்த உயர்ஸ்தானிகர் கடல் மார்க்கமாக மிகவும் கிட்டிய அயல் நாடுகளாக இருக்கும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் வலுவான பிணைப்பின் குறியீடாகவே 'ஐ. என். எஸ். டில்லி' கப்பலின் இலங்கை பயணம் அமைந்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.09.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 19

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அடையாள எதிர்ப்பின் பயன்

இறுதி யுத்தத்தின்போது, யுத்தத்தை நிறுத்துவதற்காக பலவாறான முயற்சிகள் இடம்பெற்றன. புலம்பெயர் சமூகம் மேற்குலக வீதிகளில் திரண்டு - குறிப்பாக கனடாவில் திரண்டு - தங்களின் கண்டனங்களை முன்வைத்திருந்தது. இதன் மூலம் யுத்தத்தைத் தடுத்து நிறுத்தலாமென்று அவர்கள் நம்பினர். ஆனால், அனைவரின் முயற்சியும் தோல்வியிலேயே முடிவுற்றது. யுத்தம் முடிவுற்றதன் பின்னரும் - மனித உரிமைகள் சார்ந்தும் - நீதி சார்ந்தும் - இலங்கை ஆட்சியாளர்கள்மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியுமென்று பலரும் நம்பினர். உள்ளுக்குள்ளும் - வெளியிலும் பலவாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் நீயா- நானா என்று போட்டி போட்டுக் கொண்டு - ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு கடிதங்களை அனுப்பியிருந்தன. தங்களின் கடிதங்களைத்தான் ஆணையாளர் உள்வாங்கியிருப்பதாகவும் திருப்தி வெளியிட்டன.

இடம்பெற்றது இனப்படுகொலையா அல்லது இல்லையா என்னும் விவாதங்களில் ஈடுபட்டனர். குறிப்பாக, சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் மோதிக் கொண்டனர். வடக்கு மாகாண சபையில் இனப்படுகொலை தீர்மானம் ஒன்றும் கொண்டுவரப்பட்டது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு விடயங்களை கொண்டு செல்வது தொடர்பில் விவாதிக்கப்பட்டது. இதில், யார் சரி - பிழையென்றும் விவாதங்கள் இடம்பெற்றன. சாதாரண மக்களோ இவ்வாறான விவாதங்களை வழமைபோல் சாதாரணமாகக் கடந்து சென்றனர்.

இன்று அனைத்து விவாதங்களும் ஒன்றுமில்லாமல் போய்விட்டன. விகாரைகள் நிர்மாணிப்பதை எதிர்க்க வேண்டும் - என்பதாக பழைய இடத்துக்கே தமிழர் அரசியல் நகர்த்தப்பட்டிருக்கின்றது. இப்போதும்கூட விகாரைகளை ஓர் ஆக்கிரமிப்பு கருவியாக சிங்கள - பௌத்த தரப்புகளால் கையாள முடிகின்றதென்றால் - கடந்த 14 வருடங்களாக இடம்பெற்ற விவாதங்கள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகத்தானே இருக்க முடியும்.

இதிலிருந்து, தமிழர் தரப்புகள் எதனை கற்றுக்கொள்ளப் போகின்றன? தொடர்ந்தும் வெறும் சுலோகங்களை உச்சரித்துக் கொண்டு, ஆங்காங்கே ஒரு சில மணித்தியால எதிர்ப்புகளை காண்பித்துவிட்டு - கலைந்து சென்று கொண்டிருக்கப் போகின்றனவா - ஏனெனில், எதிர்ப்புகளால் எதனையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. முக்கியமாக, விகாரைகள் நிர்மாணிப்பதை பௌத்த அமைப்புகள் கைவிடுவதாக இல்லை. தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்ட நிலங்களை மீட்டெடுப்பதற்கு வழியில்லை. சட்ட ரீதியில் விடயங்களை கையாண்டும் எதுவும் நடைபெறவில்லை. பௌத்த மத விவகாரத்தில் அரசாங்கம் உருப்படியான தலையீடுகளை செய்வதாகவும் இல்லை. இந்த விடயங்கள் தொடர்பில் வெளியாரும் தலையீடு செய்ய விரும்பவில்லை. இது ஒரு சிக்கலான விடயமென்றே அவர்களும் கருதுவதாகத் தெரிகின்றது.

இலங்கையில் தலையீடு செய்யும் அமெரிக்கா மற்றும் ஏனைய மேற்குலக நாடுகள் - ஒரு விடயத்தில் கவனமாக இருப்பதாகத் தெரிகின்றது. அதாவது, பெரும்பான்மை சிங்கள மக்களை அதிகம் அந்நியப்படுத்தாத வகையில்தான் விடயங்களை கையாள வேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். ஆட்சியை தீர்மானிக்கும் மக்களாக அவர்கள் இருப்பதால் தங்களுக்கு வேண்டப்பட்டவர்களை ஆட்சிக்கு கொண்டுவர வேண்டுமாயின், சிங்களவர்களை அதிகம் விரோதித்து கொள்ளக்கூடாது.

ஏனெனில், ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும்கூட, இலங்கையின் அரசியலானது எதிர்பார்த்தவாறு சிங்கள - பௌத்தவாத கட்டமைப்புகளின் பிடியிலிருந்து அதிகம் வெளியில் வரவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் ஒன்றில் உச்சமான எதிர்ப்பில் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டுநிற்க வேண்டும் - இல்லாவிட்டால் ஆட்சி மாற்றங்கள் மூலம் கிடைக்கும் இடைவெளிகளில் உடனடியாக எதனைப் பெற முடியுமோ அதனைப் பெற்றுக்கொண்டு படிப்படியாக நகர வேண்டும். இவை தவிர வேறு வழிகள் இல்லை.

# தாக்குதலில் காயமடைந்த இளைஞர் உயிரிழந்தார்!

யாழ்ப்பாணம், செப். 05

இளைஞர் ஒருவரை சிலர் இணைந்து தாக்கியதில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார்.

கொடிகாமத்தை சேர்ந்த யதீஸ்குமார் (வயது 28) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த ஓகஸ்ட் 31ஆம் திகதி முகமாலையில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இதில் படுகாயமடைந்தவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இதனிடையே, இளைஞரை தாக்கிய சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதானவர்களில் ஒருவர் முகமாலையை சேர்ந்தவர் என்றும் மற்றையவர் அரியாலையை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான சந்தேகபர்கள் நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இருவரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் பண்ணையில் கைது



யாழ்ப்பாணம், செப். 05

யாழ்ப்பாணம் - பண்ணையில் ஞாயிற்றுக்கிழமை 765 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவ லுக்கமைய யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி எஸ். எஸ். சுபசிங்க தலைமையிலான குழு அவரை கைது செய்தது.

கைதானவர் மண்டை தீவை சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை யாழ் .நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03)

# சாரதிகளின் தவறுகளால் 250 கோடி ரூபாய் வருமானம்

கொழும்பு, செப். 05

2022ஆம் ஆண்டு வாகன சாரதிகள் செய்த குற்றங்களுக்காக அறவிடப்பட்ட தண்டப்பணத்தின் பெறுமதி 250 கோடி ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 130 கோடி ரூபாய் பொலிஸ் உத்தியோகத்தர்களால் அபராதம் விதிக்கப்பட்டதன் மூலம் பெறப்பட்டுள்ளது. மேலும் 120 கோடி ரூபாய் நீதிமன்றங்கள் மூலம் தண்டமாக விதிக்கப்பட்டது.

குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் அதிக அபராதம் விதிக்கப்படும் குற்றமாகும். அதன் மூலம் கிடைத்த வருமானம் 62.2 கோடி ரூபாய் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# இராக்கினி தேவாலயத்தின் உண்டியல்கள் உடைத்து திருட்டு

மன்னார், செப். 05

மன்னார் - தோட்டவெளி புனித வேத சாட்சிகளின் இராக்கினி தேவாலயத்தில் உள்ள இரண்டு உண்டியல்கள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


இந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

வரலாற்று சிறப்புமிக்க இந்த ஆலயத்துக்கு ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இவர்கள் இடும் உண்டியலில் இடும் காணிக்கையே இவ்வாறு திருடப்பட்டுள்ளது.

இரண்டு ஆண்டுகளாக பக்தர்கள் உண்டியல்களில் இட்ட பணமே இவ்வாறு திருடப்பட்டன. இவ்வாறு திருடப்பட்ட பணம் பல இலட்சம் ரூபாய் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் எருக்கலம்பிட்டி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**செப்ரெம்பர் - 05 வெள்ளிக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆவணி 16**
**நல்ல நேரம் : 07.30 - 09.00**
**ராகு காலம் : 03.00 - 04.30**
**திதி : சஷ்டி**




**மேடம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுக்கு சலுகைகளை அறிவிப்பீர்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்**

விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். டென்ஷன் அதிகரிக்கும். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். மறைமுக தொந்தரவுகள் வரும்.

**மிதுனம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**கடகம்**

உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் நம்பிக்கை தருவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**சிம்மம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இ வியாபாரத்தில் தள்ளிபோன வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**

சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமைத் தேவைப்படும்.

**துலாம்**

கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர உதவிகள் கிடைக்கும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் வரவு கணிசமாக உயரும். திறமைகள் வெளிப்படும்.

**விருட்சிகம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். திடீர் யோகம் கிட்டும்.

**தனுசு**

குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை மாற்றுவீர்கள். எதிலும் தெளிவு பிறக்கும் நாள்.

**மகரம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருடன் மோதல் வரக்கூடும். புது வேலை அமையும். வியாபாரம் தழைக்கும். சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்**

துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். ஆதரவு பெருகும். தைரியம் கூடும் நாள்.

**மீனம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். தோற்றப் பொலிவுக் கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். மரியாதை கூடும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

# மாநில அரசுகளை சிதைப்பதன்மூலம் பா. ஜ. க. இந்தியாவை அழிக்கின்றது!

## முதலமைச்சர் ஸ்டாலின் குற்றச்சாட்டு

*சென்னை, செப். 05*

“மக்களுக்கு நேரடியாக நன்மை செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கிற மாநில அரசுகளை சிதைப்பதையே நோக்கமாக வைத்திருக்கிறார்கள். இது மூலமாக ஒட்டு மொத்த இந்தியாவையும் சிதைக்க பார்க்கிறார்கள்” என்று பா. ஜ. க. மீது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு. க. ஸ்டாலின், ‘வஞ்சிக்கும் பா. ஜ. கவை வீழ்த்துவோம் இந்தியாவை மீட்டெடுப்போம்!’ என்ற தலைப்பில் நேற்று வெளியிட்ட ‘இந்தியாவுக்காக பேசுவோம்’ என்ற தலைப்பில் வெளியிட்ட ஒலி நாடாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “இந்தியாவுக்காக எல்லோரும் பேசியாக வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். காலம் காலமாக, இந்திய மக்கள் அனைவரும் போற்றி பாதுகாத்து வந்த ஒற்றுமை உணர்வு என்ற தத்துவத்தை சிதைத்து, இந்தியாவின் அடிப்படை கட்டமைப்பையே சிதைக்க பாரதிய ஜனதா கட்சி முயற்சி செய்கிறது.

2014ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பாரதிய ஜனதா கட்சி - தேர்தலுக்கு முன்னால் கொடுத்த எந்த மக்கள் நல வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை.

நன்றாக இருந்த இந்தியாவின் பொதுத்துறை கட்டமைப்பையும் சீரழித்து, சின்னாபின்னமாக்கிவிட்டார்கள். தங்களுக்கு நெருக்கமான தொழிலதிபர்களுக்கு அதை மடை மாற்றும் செயலை மட்டுமே செய்து கொண்டு இருக்கிறார்கள். ஒட்டு மொத்த இந்திய மக்களின் நலன் என்பது - சிலரின் நலனாக சுருங்கிவிட்டது.

இந்தியா முழுவதும் இருக்கும் விமான நிலையங்களும், துறைமுகங்களும் தனியார் கைக்குப் போகிறது. பிரதமர் மோடி சொன்னதுபோல், உழவர்களின் வருமானமும் இரண்டு மடங்கு ஆகவில்லை ஏழை பாழைகளின் வாழ்க்கைத்தரமும் உயரவில்லை. இதை எல்லாம் மறைப்பதற்காகத்தான் மதவாதத்தைக் கையில் எடுத்திருக்கிறார்கள். மக்களின் மத உணர்வுகளைத் தூண்டி, அதில் குளிர் காயப் பார்க்கிறார்கள்.

2002-ஆம் ஆண்டு குஜராத் மாநிலத்தில் பா.ஜ.க. விதைத்த வன்முறை, வெறுப்பு விதையானது, 2023-ஆம் ஆண்டு வடகிழக்கு மாநிலமான மணிப்பூரைப் பற்றி எரிய வைத்திருக்கிறது. ஹரியானாவில் மூட்டிவிடப்பட்ட மதவெறித் தீ, இன்றைக்கு அப்பாவி மக்களின் உயிரையும் சொத்துகளையும் காவு வாங்குகிறது. இதற்கு இப்போது முற்றுப்புள்ளி வைக்கவில்லை என்றால், இந்தியாவை யாராலும் காப்பாற்ற முடியாது.

2024 தேர்தல் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை விட, யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்று தீர்மானிக்க வேண்டிய தேர்தல். 9 ஆண்டு கால பா. ஜ. க. ஆட்சியில், மாநிலங்களை அழிக்கின்ற படுபாதகமான பல மோசடிகள் செய்யப்பட்டிருக்கின்றன - என்றும் கூறியுள்ளார்.

(ஐ)

# சனாதன கருத்தியல் எதிர்ப்பு இந்துகளுக்கு எதிரானது அல்ல

## விடுதலை சிறுத்தைகள் கட்சி

*சென்னை, செப். 05*

“சனாதனத்தை ஒழிப்பது என்பது ஒரு கருத்தியலை, ஒரு கோட்பாட்டை எதிர்த்து பேசுவதாகும். அது ஒட்டுமொத்த இந்துக்களுக்கும் எதிரானது என்பது போன்றதொரு திரிபு வாதத்தை, பொறுப்புள்ள பதவியில் இருப்பவர்களே பேசுவது வியப்பாக இருக்கிறது”, என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்தபோது,

“அண்மையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் நானும் கலந்து கொண்டு உரையாற்றினேன். தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதியும் பங்கேற்று உரையாற்றினார். சனாதனத்தை ஒழிப்பது இன்றியமையாத தேவை. எப்படி தொற்று நோய்களை நாம் ஒழித்தாக வேண்டுமோ? அப்படி இதையும் ஒழித்தாக வேண்டும் என்று அவர் பேசியதை இன்று அகில இந்திய அளவிலான ஒரு பிரச்னையாக, உள்துறை அமைச்சரான அமித் ஷா போன்றவர்களே பேசும் நிலை உருவாகியிருக்கிறது. இது அதிர்ச்சியளிக்கிறது.

சனாதனத்தை ஒழிப்பது என்பது ஒரு கருத்தியலை ஒரு கோட்பாட்டை எதிர்த்து பேசுகின்ற ஒன்றாகும். அது ஒட்டுமொத்த இந்துக்களுக்கும் எதிரானது என்பது போன்றதொரு திரிபு வாதத்தை, பொறுப்புள்ள பதவியில் இருப்பவர்களே பேசுவது, வியப்பாக இருக்கிறது. சனாதனம் சமத்துவத்துக்கு எதிரானது என்பதால்தான், அது விமர்சனத்துக்கு உள்ளாகிறது என்பதை அமைச்சர்களே இன்னும் புரிந்துகொள்ளாமல் தங்களின் அரசியல் ஆதாயத்துக்காக விமர்சனம் செய்வது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. இந்தப் போக்கை விடுதலை சிறுத்தைகள் கட்சி கண்டிக்கிறது” என்று அவர் கூறினார்.

(ஐ)

# மோடியை தி. மு. க. எதிர்த்தால் நான் போட்டியிடாமல் விலகுவேன்!

## நாம் தமிழர் கட்சியின் சீமான் அறிவிப்பு

*கோவை, செப். 05*

தமிழகத்தில் நரேந்திர மோடி போட்டியிட்டு அவரை எதிர்த்து தி. மு. க. வேட்பாளரை நிறுத்தினால், நான் அங்கு போட்டியிட மாட்டேன்” என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் கோவை மண்டல கலந்தாய்வு கூட்டம் சீமான் தலைமையில் கோவையில் நடந்தது. பின்னர் செய்தியாளர்களிடம் சீமான் கூறியவை வருமாறு,

தேர்தலில் தனித்து போட்டியிடுவதுதான் நாம் தமிழர் கட்சியின் கொள்கை. அண்ணாமலை தனித்து நின்று வெற்றி பெறட்டும். ஏன் கூட்டணி வைத்துள்ளார்? அண்ணாமலைதான் வெறுப்பு அரசியல் நடத்தி வருகிறார். வயிறு காய்ந்து இருக்கும் போது வானில் சந்திரயான் எதற்கு? இந்தியாவில் 80 கோடி ஏழை மக்கள் உள்ளனர். அவர்களுக்கு பசியாற்ற வேண்டும்.

தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் தராத காங்கிரஸ் கட்சிக்கு தி. மு. க. ஆதரவு அளிக்கிறது. தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தி. மு. க., அ. தி. மு. க. இடையே நடப்பது பங்காளி சண்டை. இதில் பா. ஜ. க. ஏன் தலையிடுகிறது? தமிழ்த் தேசியத்தை வளர்க்க வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை. சாதி, மத உணர்வு சாகும்போது தமிழ் இனம் தானாக வளரும். மொழிப் பற்று, இனப் பற்று வரும்போது சாதிப் பற்று மறைந்துவிடும். தமிழகத்தில் மோடி போட்டியிட்டால், அவரை எதிர்த்து தி. மு. க. போட்டியிட்டால் நான் அங்கு வேட்பாளராக நிற்க மாட்டேன் -என்றார்.

(ஐ)

# ஜனாதிபதி விசாரணைக்குழு பரிந்துரைகள் மூடி மறைப்பு

## மல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 05
ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச தரத்திற்கு அமைவாக முழுமையான மற்றும் வெளிப்படையான விசாரணைகளை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டுமென கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்கள் தொடர்பான உண்மையை வெளிக்கொண்டுவர கத்தோலிக்க திருச்சபை உட்பட கத்தோலிக்க சமூகம் ஆதரவை வழங்கவேண்டும் என்ற பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் கவலை வெளியிட்டிருந்தார்.

ஆகவே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துடன் இணைந்து மேலதிக விசாரணைகளுக்கு கத்தோலிக்க திருச்சபை ஆதரவை



வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடந்த ஆராதனையில் பேசிய பேராயர், பயங்கரவாதத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நீதி வழங்கியதாகப் பெருமை பேசுவதைத் தவிர, பொது பாதுகாப்பு அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகள் எதுவும் செய்வதில்லை என குற்றம் சாட்டினார்.

பொய்களை கூறாமல், பொறுப்பைச் சரியாக நிறைவேற்றுங்கள் என்றும் செய்ய வேண்டிய விடயங்களை செய்யாமல், பேச்சுவார்த்தைக்கு வரவில்லை என தம்மை குற்றம் சாட்டுவதில் எந்தப் பயனும் இல்லை என்றும் என்றும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சுட்டிக்காட்டினார்.

பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் முறையான விசாரணையே தங்களுக்குத் தேவை என வலியுறுத்திய பேராயர், அது சுயாதீன ஆணைக்குழு ஒன்றின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடத்திய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் பலவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை எனவும், அதன் சில பரிந்துரைகளை அரசாங்கம் மறைத்து வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ)

# 2022ஆம் ஆண்டு 207 பில்லியன் ரூபாய் நோட்டுகளை அழித்தது மத்திய வங்கி

கொழும்பு, செப். 05
கடந்த ஆண்டு சேதமடைந்த அல்லது சிதைக்கப்பட்ட 207.3 பில்லியன் பெறுமதியான 238.5 மில்லியன் நாணயத்தாள்களை இலங்கை மத்திய வங்கி அழித்துள்ளது.

நாட்டில் சுத்தமான மற்றும் தரமான நாணய புழக்கத்தை உறுதி செய்வதற்காக மத்திய வங்கி அவ்வப்போது சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களை அழித்து வருகிறது.

2021 இல் 44.3 பில்லியன் பெறுமதியான 108.2 மில்லியன் நாணயத் தாள்களை அழித்தது டன் 2020 இல் 62.2 பில்லியன் ரூபாய் பெறுமதியான 127.3 மில்லியன் நாணயத் தாள்கள் அழிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2019 ஆம் ஆண்டில், 139.8 பில்லியன் பெறுமதியான 235 மில்லியன் நாணயத்தாள்கள் மத்திய வங்கியினால் அழிக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டில் மொத்தமாக 343.8 மில்லியன் சிதைக்கப்பட்ட நாணயத் தாள்கள் அழிக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உணவு வழங்கும் நடவடிக்கை நிறுத்தம்!

மட்டக்களப்பு, செப். 05
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்கு உணவு வழங்கும் நடவடிக்கை நிறுத்தப்பட்டுள்ளது.

உணவு வழங்குநர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் பல மாதங்களாக வழங்கப்படாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வைத்தியசாலைக்கு உணவு வழங்குவதற்கான கேள்வி கோரல் அதிக விலைக்கு வழங்கப்பட்டதாக கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்நிலையில் உணவு வழங்குனர்களுக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகளை வழங்க முடியாததால் உணவு விநியோகம் நிறுத்தப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சிறுவர் மீதான வன்முறைகள் குறித்து முல்லைத்தீவில் விழிப்புணர்வு பேரணி






முல்லைத்தீவு, செப். 05
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நேற்று சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்த கவனயீர்ப்பு பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஏ.யு. லங்கா நிறுவனத்தினர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துடன் இணைந்து இவ் விழிப்புணர்வு பேரணியினை முன்னெடுத்திருந்தனர்.

இதில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந், முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ, ஏ.யு. லங்காநிறுவனத்தின் செயற்திட்ட உத்தியோகத்தர் பி.நந்தகுமார், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஈஸ்டர் தாக்குதல் குற்றச்சாட்டால் எனது நற்பெயருக்குக் களங்கம்!

## புலனாய்வுப் பிரிவின் தலைவர் நீதிமன்றில் கூறினார்

கொழும்பு, செப். 05
ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், பிரதிவாதியான அருட்தந்தை சிறில் காமினி இணையத்தில் வெளியிட்ட அறிக்கையினால் தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளதாக அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சலே நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

இந்த விசாரணை கொழும்பு பிரதான மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் நடைபெற்றது. அப்போது, பிரதிவாதி அருட்தந்தை சிறில் காமினியும் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

ஈஸ்டர் பயங்கரவாத தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுடன் 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் 23 ஆம் திகதி சூம் மூலம் நடத்திய கலந்துரையாடலில் அருட்தந்தை சிறில் காமினியின் அறிக்கையால் ஏற்பட்ட அவமதிப்புக்கு 50 மில்லியன் ரூபாய் இழப்பீடு கோரி சுரேஷ் சலே இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளார்.

அரசுத் தரப்பு சார்பில் சட்டத்தரணி பஹான் வீரசிங்க எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த சுரேஷ் சலே, தான் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் இராணுவத்தில் 36 வருட சேவையை நிறைவு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

குற்றம் சாட்டப்பட்டவரின் இந்தக் கூற்றினால் தமக்கும் தனது பிள்ளைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டதாகத் தெரிவித்த அவர், ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான நீதிமன்ற விசாரணையின் போது, இவ்வாறான கருத்து தவறான சமூகக் கருத்தை உருவாக்கும் எனவும் குறிப்பிட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவரின் இந்த கூற்று காரணமாக தாம் மிகுந்த அழுத்தத்திற்கு உள்ளானதாக சாலே கூறினார்.

இதையடுத்து, அடுத்தகட்ட விசாரணை ஜனவரி 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, பிரித்தானிய ஊடகமொன்று நேற்று வெளியிட்ட செய்தியில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் சுரேஷ் சாலே, ராஜபக்ஷக்களுக்கு தொடர்பிருப்பதாக குற்றம்சாட்டியுள்ளது. (அ)

# 148 பாதாள உலக குற்றவாளிகள் கைது செய்யப்படுவது அவசியம்

கொழும்பு, செப். 05
கொலை உட்பட பல்வேறு குற்றங்களைச் செய்து நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற 148 பாதாள உலகக் குற்றவாளிகளை கைது செய்வதற்கு இன்ரர்போல் சிவப்பு அறிவித்தலை விடுத்துள்ளது.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான நாடாளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்றது.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான துறைசார் கண்காணிப்புக்கான பாராளுமன்றக் குழுவின் குற்றவியல் மற்றும் சட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட இதனைத் தெரிவித்தார்.

சந்தேகநபர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்கும் வகையில்நாட்டை விட்டு வெளியேறிய குற்றவாளிகளை கைது செய்யுமாறு இன்டர்போல் அறிவிப்பு, இலங்கை பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சர்வதேச பொலிஸார் இந்த சிவப்பு அறிவித்தல்களை பிறப்பித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் சந்தேக நபர்களில் சிலர் ஏற்கனவே இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் இந்தியாவில் 12 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு அந்நாட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மரண தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்த சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், பல நாடுகள் மரண தண்டனையை நிராகரிப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதன் காரணமாக மரணதண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு சர்வதேச பொலிஸார் சிவப்பு அறிவித்தலை வழங்க மறுத்ததாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட குறிப்பிட்டார்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை! பலத்தை காட்ட இரு முனை போர்!!

கொழும்பு, செப். 05

**சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடிப்பதற்கு ஆளுங்கட்சி தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.**

**பிரேரணைக்கு எதிராக ஆதரவு திரட்டுவதற்காகவும், பேச்சுகளை முன்னெடுப்பதற்காகவும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய ஆளுங்கட்சிக்குள் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.**

இந்த குழு எதிரணி உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்திவருகின்றது எனவும், பிரேரணையை எதிர்க்க முடியாவிட்டால் வாக்கெடுப்பை தவிர்த்துக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

அத்துடன், ஆளுங்கட்சியின் வெளிநாடு செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருப்பவர்களுக்கு நாடு திரும்பும் கட்டளையும் அனுப்பட்டுள்ளது.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றிக்கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும் தீவிரம் காட்டிவருகின்றது. நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தப்பட்டுவருகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு தேசிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பவற்றின் பாராளுமன்றக் குழு பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் 5 ஆம் திகதி கூடும் போது இது தொடர்பில் முடிவெடுக்கப்படலாம்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு செப்ரெம்பர் 8 ஆம் திகதி மாலை நடைபெறுகின்றது. (அ)

# புதிய பயணத்துக்கு சு. க. தலைமை தாங்கவேண்டும்

## மைத்திரிபால சிறிசேன கோரிக்கை

கொழும்பு, செப். 05

சுதந்திரக் கட்சியானது ஒரேயொரு அரசியல் சித்தாந்தத்திற்கு நாட்டை இட்டுச் செல்ல வேண்டும் எனவும், அனைவரும் ஒன்றிணைந்து ஒரே பயணத்திற்கு தயாராக வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் பத்தரமுல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் ஆட்சி அமைத்தால் தான் நாட்டில் நீண்ட காலம் நீடிக்கும். நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து ஒரே பயணத்திற்கு தயாராக வேண்டும். ஒரு அரசியல் சித்தாந்தத்திற்கு நாட்டை வழிநடத்த வேண்டும். அதற்கு சுதந்திரக் கட்சி தலைமை தாங்க வேண்டும்-என்றார்.

கட்சிக்கு முன் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டும் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி பல்வேறு சவால்களை எதிர்நோக்கும் கட்சியாக இருந்தாலும், இந்தக் கட்சியை நாட்டிலிருந்து துடைத்தெறிய முடியாது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (அ)

# அம்பாந்தோட்டையில் முதலீடு செய்யும் சினோபெக் நிறுவனம்



கொழும்பு, செப். 05

அம்பாந்தோட்டையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் சினோபெக் நிறுவனம் முதலீடு செய்யவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

சினோபெக் எரிபொருள் விநியோக நிறுவனம், சினோபெக் எரிபொருள் சுத்திகரிப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகள் குழு மற்றும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான திட்ட முன்மொழிவு அடுத்த வாரம் முன்வைக்கப்படுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

இதனிடையே, நாடளாவிய ரீதியில் இம்மாத இறுதிக்குள் தமது விநியோக செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# ஓட்டோ சாரதிகளுக்கு காதல் வலை விரித்து ஏமாற்றிய ஜோடி சிக்கியது!

கொழும்பு, செப். 05

முச்சக்கரவண்டி சாரதிகளை ஏமாற்றி பணம் பறித்த ஹனிட்ராப் குழுவை பாணந்துறை தெற்கு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

33 வயதான கணவரும், 31 வயதான மனைவியுமே கைதாகியுள்ளனர்.

முச்சக்கர வண்டியில் வாடகை பயணம் செய்வதாக ஏறி, சாரதிகளுக்கு காமவலை விரித்து, உடலுறவுக்காக வனாந்தரமான இடங்களுக்கு அழைத்துச் செல்வது மனைவியின் கடமை. அங்கு மறைந்திருந்து, சாரதியை தாக்கி பணம் பறிப்பது கணவனின் வேலை.

கைதான ஜோடி மொரட்டுவ எகொடஉயன பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பாணந்துறை புகையிரத நிலையத்திற்கு அருகில் அதிகாலை நான்கு மணியளவில் முச்சக்கரவண்டியில் ஏறிய இளம் பெண்ணொருவர், வாடகை பயணம் செய்ய அழைத்தார். சாரதி அவரை ஏற்றிக்கொண்டு பயணத்தை தொடங்கினார்.

பயணத்தின் இடையில் அந்த பெண் விரித்த காம வலையில், சாரதி விழுந்தார்.

இருவரும் உல்லாசம் அனுபவிப்பதற்காக அருகிலுள்ள ஆளரவமற்ற பற்றையான பகுதிக்கு சென்றுள்ளனர். இதன்போது அருகில் மறைந்திருந்த கணவர் வந்து முச்சக்கர வண்டி சாரதியை தாக்கியுள்ளார். வீடியோவும் எடுத்தார்.

இந்த விவகாரத்தை சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பி விடுவேன் என்றும், அவ்வாறு செய்யாமல் விடுவதாயின், கழுத்தில் இருந்த இரண்டரை பவுண் தங்கச்சங்கிலிலை நகையை தருமாறு மிரட்டி பறித்துக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார்.

முறைப்பாட்டையடுத்து, சந்தேகநபரான தம்பதியை கைது செய்த பொலிஸார், கொள்ளையடிக்கப்பட்ட நகையை மீட்டுள்ளனர்.

இதற்கு முன்பும் இதுபோன்ற முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அறிக்கைகள் பெறப்படும் என்றும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# பொது வேட்பாளராக போட்டியிட அநுர மட்டுமே தகுதியுடையவர்!

## அடித்துக் கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, செப். 05

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மட்டுமே எதிர்கால தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்கக்கூடிய ஒரே “பொது வேட்பாளர்” என ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது வேட்பாளரைத் தேட வேண்டிய அவசியமில்லை. ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்க பொது வேட்பாளர் ஒருவர் தேவை என எவரேனும் கூறினால், அவர் ஏற்கனவே எங்களுடன் இணைந்துவிட்டார் என்பதே அர்த்தகம்.

ரணில் விக்ரமசிங்கவை மட்டுமல்ல, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போன்றவர்களால் கட்டுப்படுத்தப்படும் எந்தவொரு அமைப்பையும் தோற்கடிக்கக்கூடிய ஒரே தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மாத்திரமே. ஆகவே, பொது வேட்பாளரை தேட வேண்டிய அவசியம் இல்லை.

2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தோற்கடிக்க முடியும்.

நாட்டில் ஆட்சிமாற்றத்துக்கான சாதகங்கள் அதிகமாக உள்ளதாக பல கருத்துக்கணிப்புகள் கூறுவதுடன், அரசாங்கத்துக்கு எதிரான அனைத்து சக்திகளும் கைகோர்க்க வேண்டிய ஒரே இடமாக தேசிய மக்கள் சக்தியே உள்ளது-என்றார்.

இதேவேளை, ஜே.வி.பியின் பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி,

அயர்லாந்தில் எனக்கு வீடு இருப்பதாக நாழிதெளொன்று செய்தி வெளியிட்டது. இது தொடர்பாக இதற்கு எதிராக பத்திரிகை ஸ்தாபனத்தில் முறைப்பாடு பதிவுசெய்த போது வெளியிடப்பட்ட செய்தி பொய்யானது எனத் தெரிவிக்கப்பட்டது.

எங்கள் மீது சுமத்தப்பட்ட அவதூறுகளுக்கு அவர்களின் சொந்த ஊடக நிறுவனங்களிலேயே பதிலும் அளிக்கப்பட்டது.

ஜே.வி.பியின் கணக்குகளில் 800 கோடி ரூபா இருப்பதாக போலி பிரசாரத்தை முன்னெடுத்தனர். எங்கள்மீது அரசியல் குற்றம் சுமத்த முடியாது என்பதற்காக அவதூறுகளை பரப்புகின்றனர்“ எனக் கூறியுள்ளார்.

# இலங்கை வனவியல் நிறுவகம் நுவரெலியாவில் திறந்து வைப்பு



கொழும்பு, செப். 05

நுவரெலியா-ஹவா எலியா, சண்டதன்ன பிரதேசத்தில் சர்வதேச தரத்திற்கமைய நிர்மாணிக்கப்பட்ட இலங்கை வனவியல் நிறுவகம் வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிறுவகம் 1,500 மில்லியன் ரூபா செலவில் 53 ஹெக்டேயர் பரப்பளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குறித்த நிறுவனத்தில் தேசிய மற்றும் சர்வதேச வன மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் பயிற்சியை பெற முடியும்.

குறித்த கட்டடத் தொகுதி 7 உத்தியோகபூர்வ குடியிருப்புகள், ஒரு விளையாட்டு அரங்கம், 80 பேர் தங்கும் வசதி கொண்ட தங்குமிடம், ஒரே வேளையில் 150 பேர் அமரக்கூடிய சாப்பாட்டு மண்டபம், கேட்போர்கூடம், விரிவுரை மண்டப வசதிகள், நூலகம், வாகனம் நிறுத்தும் வசதி உட்பட பல்வேறு அத்தியாவசிய வசதிகளுடன் கூடிய பூரணமிக்க கட்டத்தொகுதியாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை வனவியல் நிறுவகம் உள்ளூர் மற்றும் சர்வதேசப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சியாளர்கள், பட்டதாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் வனவியல் தொடர்பிலான கல்வியை திறம்பட பயில சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளது. (அ)

# டலஸ் வந்தாலும் வராவிட்டாலும் புதிய கூட்டணியை அமைப்போம்

## ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்

கொழும்பு, செப். 05

**ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையில் அமைக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டணியில் இணைவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இறுதி இணக்கப்பாட்டுக்கு வரவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

**'டலஸ் வந்தாலும், வராவிட்டாலும் கூட்டணி அமைப்போம்' என ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.**

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் உருவாக்கப்பட்டுவரும் புதிய அரசியல் கூட்டணியின் யாப்பு இறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அது தற்போது கூட்டணியின் கட்சித் தலைவர்களால் ஆராயப்பட்டு வருவதாகவும் அறிய முடிந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்,

"டலஸுடன் இருக்கும் 13 பாராளுமன்ற உறுப்பினர்களில் 9 எம்.பிகள் எங்களுடனே உள்ளனர். நாங்கள் அவர்களுடன் சிறந்த முறையில் பணியாற்றுகிறோம். டலஸ் அங்கும் இங்கும் அவர்களை இழுக்கிறார். ஆனால், பலர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தே எதிர்காலத்தில் பணியாற்றவுள்ளனர்.

டலஸ் ஜே.வி.பியுடனும் பேச்சுகளை நடத்தி வருகிறார். எது எவ்வாறாயினும் புதிய கூட்டணியில் டலஸ் இணைந்தாலும் இணையா விட்டாலும் அதற்கான யாப்பை தயாரிக்கும் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் விரைவில் இறுதிப்படுத்தப்படும்" எனக் கூறினார்.

இதேவேளை, ஆளுங்கட்சிகளான ஐ.தே.க, பொதுஜன பெரமுன இல்லாத பரந்தப்பட்ட கூட்டணியொன்றை அமைக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அல்லது தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்குள் கூட்டணிப் பேச்சுகள் மட்டுப்படுத்தாது பரந்துபட்ட அரசியல் கூட்டணியை கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினால் உருவாக்கப்படும் எந்தவொரு அரசியல் கூட்டணிக்கும் தாம் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும், ஆனால், அந்த கூட்டணி எதிர்க்கட்சியின் பரந்த அமைப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(அ)

# முரசுமோட்டை பகுதியில் உழவு இயந்திரம் விபத்து!

## சாரதி படுகாயம்!!

கிளிநொச்சி, செப். 05

கிளிநொச்சி பகுதியில் இருந்து முரசுமோட்டை நோக்கி பயணித்த உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

முரசுமோட்டை பகுதியில் நேற்று முன் தினம் இரவு 7.30 மணி அளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அவர் தனது வீட்டுக்கு நோக்கி உழவு இயந்திரத்தில் பயணித்தபோது வேகக்கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் அருகில் இருந்த கால்வாயில் பாய்ந்து விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# கடும் மழை காரணமாக 3 மாவட்டங்களில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் பாதிப்பு

கொழும்பு, செப். 05

நாட்டின் பல பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக 3 மாவட்டங்களில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 98 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

களுத்துறை மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த மாவட்டத்தில் 15 குடும்பங்களைச் சேர்ந்த 50 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று காலை 7 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் இரத்தினபுரியிலேயே 91.5 மிமீ அளவிலான அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

கேகாலை, தல்துவ பிரதேசத்தில் 83 மில்லிமீற்றர் மற்றும் வரக்காபொலவில் 63 மில்லிமீற்றர் மழையும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

# நீதிவான் முன் நிறுத்தப்பட்டவர் கைவிலங்குடன் தப்பியோட்டம்!

கொழும்பு, செப். 05

தங்காலை பிரதேச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் போதைப் பொருளுடன் நேற்று முன் தினம் மாலை கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றுள்ளதாக வீரகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடியவர் ஜூலம்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 38 வயதுடைய கே.ஏ.பிரியந்த என்பவராவார். 8.630 மில்லிகிராம் ஹெரோயினுடன் பிரதேச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக வீரகெட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வீரகெட்டிய பொலிஸார் அவரை வலஸ்முல்ல பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்காக அழைத்துச் சென்றபோது, நீதிமன்ற வளாகத்தில் இருந்து கைவிலங்குகளுடன் தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருவதாக வீரகெட்டிய பொலிஸார் கூறினர்.

(அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளில் மோசடிகள்!

கொழும்பு, செப். 05

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உயிரிழந்தவர்கள் மற்றும் அடையாளம் காண முடியாத சடலங்களின் பிரேதப் பரிசோதனைகள் மோசடியான முறையில் நடைபெறுவதாக வைத்தியசாலை ஊழியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அதன்படி, அடையாளம் தெரியாத ஒரு நபர் உயிரிழந்தால், சடலத்தை வைத்தியசாலை பிணவறையில் வைத்து உறவினர்களை தேடுவதற்காக குறிப்பிட்ட காலம் வரை வைக்கப்படும்.

உறவினர்கள் எவரும் கிடைக்கவில்லை எனில், அடையாளம் காணப்படாத சடலம் என சடலம் புதைக்கப்படும் சந்தர்ப்பங்களில் பிரேத பரிசோதனை செய்வது கட்டாயமாகும்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், உடல் பொலிஸ் பிணையறைக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கு தடயவியல் அதிகாரியால் பிரேத பரிசோதனை நடத்தப்படுகிறது.

எனினும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அலுவலகத்தின் குறிப்பிட்ட சட்ட வைத்திய அதிகாரி ஒருவர் வைத்தியசாலையின் பிரேத அறையில் இருக்கும்போதே பிரேத பரிசோதனை செய்யாமல் படுக்கை இடைவெளிகளை மட்டும் பரிசோதித்து மரணத்திற்கான காரணத்தை குறிப்பிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஒரு தடயவியல் மருத்துவ அதிகாரி பிரேத பரிசோதனை செய்ய வழக்கமாக சுமார் மூன்று மணி நேரம் எடுக்கும். எனினும், இந்த மருத்துவ ஆய்வாளர் இரண்டு நாட்களில் 20 பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டார் என்று வைத்திய பரிசோதகர் அலுவலகத்தின் அதிகாரபூர்வ ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

இது கோவிட் காலத்தில் இருந்தே நடந்து வருவதாக வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

உரிய ஆய்வுகள் இன்றி நடத்தப்படும் விசாரணைகளினால் உயிரிழந்தவர்களின் உரிமைகள் பாதிக்கப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(அ)

# இலங்கையில் ஆண்களே அதிகம் தற்கொலை செய்துகொள்கின்றனர்

## ஆய்வில் வெளியான அதிர்ச்சி தகவல்

கொழும்பு, செப். 05

இலங்கையில் நாள்தோறும் 9பேர் அளவில் தற்கொலை செய்துகொள்வதாக பேராதனை பல்கலைக்கழக ஆய்வொன்றில் மூலம் தெரியவந்துள்ளது.

இதனடிப்படையில், மூன்று வருட காலத்தில் 9,700பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

தற்கொலை செய்துள்ளவர்களில்,

- 83 வீதமானவர்கள் ஆண்கள்
- 35 வீதமானவர்கள் வேலையில்லாதவர்கள்
- கடந்த வருடத்தில் மாத்திரம் 3,406 பேர் தற்கொலை
- நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை!

இவ்வாறு தற்கொலை செய்து கொள்பவர்களில் 40 விகிதமானவர்கள் கல்வி கற்பவர்கள் எனவும் அவர்களுள் 22 பேர் பட்டப்படிப்பை தொடர்பவர்கள் எனவும் குறித்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், நாட்டில் பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்வோர் தொடர்பாக செய்திகள் அண்மைய நாட்களில் அதிகளவில் பதிவாகியுள்ளன.

தனிநபர்கள் தற்கொலை செய்து கொள்வதுடன் சில சந்தர்ப்பங்களில் குடும்பமாகவும் தற்கொலை செய்து கொள்ளும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தற்கொலை செய்து கொள்வதற்கான காரணங்களாக தொழிலின்மை, பொருளாதார நெருக்கடி என்பன பிரதான காரணம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கல்வி கற்கும் மாணவர்களை பொருத்தமட்டில் அதிகளவான மனஅலுத்தத்திற்கு ஆளாவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை செய்து கொண்டோரில் 83 வீதமானவர்கள் ஆண்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அதில் 35வீதமானோர் வேலையற்றவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 வருடங்களில் மாத்திரம் 9,700 தற்கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அந்த எண்ணிக்கை அதற்கு முன்னைய வருத்துடன் ஒப்பிடும் போது 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும், தற்கொலை செய்து கொண்டவர்களில் 17 வீதமான பெண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் சிறுவயது பாடசாலை கல்வி கற்கும் மாணவிகள், பல்கலை மாணவிகள் 10விகிதம் காணப்படுகின்றனர்.

தற்கொலை செய்துகொண்டவர்கள் கல்வி கற்ற தரப்பினர் என்பதுடன் உயிரிழந்தவர்களில் 40 வீதமானவர்கள் சாதாரண தரத்தில் சித்தி அடைந்து உயர் தரத்தில் கல்வி கற்றவர்களாவர்.

தொழில் செய்வோர்களில் விவசாயத்தில் ஈடுபடும் தரப்பினர் இந்த தற்கொலை முயற்சிகளில் அதிகம் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இலங்கையை பொறுத்தமட்டில் 4 மணித்தியாலங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 9 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாக கொண்டு தற்கொலை எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்றார்.

இதேவேளை இது தொடர்பில் மனநல விசேட வைத்திய நிபுணர் ரூமி ரூபன் கருத்து தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே அதிகளவிலான தற்கொலை சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு செய்வது சட்டப்படி குற்றம் என்றாலும் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதை விடுத்து தற்கொலை முயற்சியில் ஈடுபடும் தரப்பினரை அடையாளம் கண்டு அவர்கள் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும்.

இதன் மூலமாகவே இந்த மரணங்களை தடுக்க முடியும். ஒருவர் மன ரீதியாக பாதிக்கப்பட்ட நிலையில் அவர் மனநோயாளர் என அடையாளம் காணப்படாமையே இந்த நிலைக்கு மற்றுமொரு காரணமாகும்.

பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு முறையாக சிகிச்சை வழங்கப்படாமையும் இதற்கு காரணமாக அமைய முடியும்.

ஒருவர் பொருளாதார ரீதியாக அல்லது மன ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தான் தற்கொலை செய்து கொள்ள போவதாக கூறும் போது பலர் இதனை கருத்திக்கொள்வதில்லை.

அவர்கள் கூறும் விடயங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. தற்கொலை செய்ய போவதாக கூறும் ஒருவருக்கும் நாம் உதவிகளை செய்வதில்லை.

பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது? மன அழுத்தத்தை எவ்வாறு இல்லாமல் செய்வது போன்று நாம் கவனம் செலுத்தும் போது தற்கொலைகள் இடம்பெறுவதை குறைக்க முடியும்-என்றார்.

கடந்த வருடத்தில் மாத்திரம் 3,406பேர் வரையில் தற்கொலை செய்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# உயர்நீதிமன்ற நீதியரசருக்கு கௌரவம்

அம்பாறை, செப். 05

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில், இலங்கை உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் மற்றும் வகுப் நியாய சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ.றைஉசுல் ஹாதி தலைமையில், நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாய சபை நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், கல்வியியலாளர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்ட இந்நிகழ்வில், இலங்கை உயர் நீதி



மன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் மற்றும் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. றைஉசுல் ஹாதி ஆகியோருக்கு சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் பொறியியலாளர் ஏ. ஹிபத்துல் கரீம், கல்முனை முகையதீன் ஜும்மா பள்ளிவாசல் தலைவர் வைத்தியர் எஸ்.எம்.ஏ அஸீஸ், கல்முனை வர்த்தக சங்க தலைவர் கே.எம். எம். சித்தீக் உள்ளிட்ட பாடசாலை அதிபர்கள் பள்ளிவாசல் நிர்வாகிகள் என பலரும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். (அ)



# மாணவர்கள் சிரமதானம்

அம்பாறை, செப். 05

அக்கரைப்பற்று கல்விவலயத்திகுட்பட்ட அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய மாணவர்களினால் சிரமதான நிகழ்வு இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஏ. அன்சார் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

கோணாவத்தை இரும்பு பாலத்தடியில் நடைபெற்ற இச்சிரமதானது பாலத்தின் இரு பக்கங்களிலும் காணப்பட்ட குப்பை, கூழங்கள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டதுடன் பொது மக்கள் ஓய்வெடுக்கும் இடமாகவும் காணப்படுகிறது. (அ)

# வெடிக்காத ஷெல் மீட்பு



திருமலை, செப். 05

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலநகர் பகுதியில் வெடிக்காத நிலையில் செல் ரக குண்டொன்று காணப்படுவதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி உரிமையாளர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை துப்பரவுப் பணியை மேற்கொண்டிருந்த போது வெடிபொருள் இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து குறித்த இடத்தில் தற்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# தான்தோன்றீச்சரத்தில் தேரோட்டம்!

மட்டக்களப்பு, செப். 05

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் ஆலயத்தின் தேரோட்டம் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் புடைசூழ நேற்று முன்தினம் இனிதே நடைபெற்றது.

கிழக்கிலங்கையின் முதல் தேரோடும் ஆலயம் என்ற பெருமையினைப் பெற்ற, இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகவும் கருதப்படும் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் ஆலயத்தின் திருவிழா கடந்த மாதம் 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

நேற்று முன் தினம் பகல் கொடிக்கம்பத்திற்கு விசேட அபிசேக ஆராதனை நடைபெற்றதுடன் வசந்த மண்டபத்தில்



பூசைகள் நடைபெற்று வண்ணக்குமார்கள் பாரம்பரிய நடைமுறைகளுடன் பிள்ளையார் மற்றும் தான்தோன்றீஸ்வரர் தேரடிக்கு கொண்டுவரப்பட்டு இரண்டு தேர்களுக்கும் பூசைகள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து இரண்டு தேர்களும் ஆலய முன்றிலுக்கு பக்தர்களினால் இழுத்துவரப்பட்டு தேர் உற்சவம் இனிதே நிறைவு பெற்றது. (அ)

# கல்முனை வலயத்தின் ஏற்பாட்டில் ஆங்கில மொழித் தினப் போட்டி!

அம்பாறை, செப். 05

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டி கல்முனை கல்வி வலய கல்முனை கர்மேல் பத்திமா கல்லூரியில் இன்று கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹறுதுல் நஜீம் தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நான்கு கல்வி வலயங்களை சேர்ந்த மாணவர்கள் இந்த மாவட்ட மட்ட போட்டிகளில் பங்குபற்றினர். மாவட்ட மட்ட போட்டிகளின் தொடக்க நிகழ்வை கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனக சூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வைபக ரீதியாக தொடங்கி வைத்தார். இங்கு அதிதிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் முன்னிலை



யில் ஆங்கில கல்வியின் முன்னேற்றம், எதிர்கால ஆங்கிலத்தின் தேவைகள், ஆங்கில கல்வியின் முன்னேற்றம், கிழக்கு மாகாண கல்வி மேம்பாடு தொடர்பில் உரை நிகழ்த்தினார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 30, 2023 அன்று கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம் ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டு அவருக்கு கல்முனை கல்வி மாவட்டம் சார்பில் சிவப்பு கம்பள வரவேற்பு மரியாதையும் வழங்கப்பட்டதுடன் நினைவுச்சின்னங்களும், பட்டாடைகளும் போத்தி கௌரவிக்கப்பட்டார்.

இங்கு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் அகிலா கனக சூரியம், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் உட்பட கல்வி பணிப்பாளர்கள் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கி கௌரவித்தனர். (அ)

# காட்டு யானைகளின் அட்டகாசம்



காரைதீவு, செப். 05

காரைதீவுப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தினம் தினம் அதிகரித்து வருகிறது.

அறுவடையை அடுத்து நேற்று முன்தினம் இரவு காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்தில் சுமார் 50 யானைகள் பிரவேசித்துள்ளன.

அதில் சில யானைகள் மக்களின் குடிமனைப் பகுதியில் புகுந்து அட்டகாசம் செய்தன. இதன்போது மதில்கள் உடைக்கப்பட்டன. தென்னைகள், வாழைகள் துவம்சம் செய்யப்பட்டன.

சுமார் நான்கு வீடுகள், உடைமைகள், பயிர்கள் சேதமாக்கப்பட்டன. பின்பு யானை வெடி கொளுத்தியதன் காரணமாக அவை பின் வாங்கி சென்றன.

# நிலவில் 40 சென்ரி மீற்றர் உயரம் பறந்து மீண்டும் மெதுவாகத் தரையிறங்கியது 'விக்ரம் லாண்டர்'

புதுடில்லி, செப். 05

சந்திரயான் -3 இன் "விக்ரம்" லேண்டர் நிலவில் 40 சென்ரி மீட்டர் உயரம் வரையில் பறந்து மீண்டும் மெதுவாக தரையிறங்கியுள்ளதாக இஸ்ரோ தகவல் வெளியிட்டுள்ளது.

அதன்படி, 'விக்ரம்' லேண்டரின் செயல்பாடு எதிர்காலத்தில் விண்வெளி வீரர்களை நிலவில் தரையிறக்கும் திட்டத்துக்கு முன்மாதிரியாக இருக்கும் எனவும் இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

சந்திரயான்-3 இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ மூலம் நிலவின் தென் துருவத்துக்கு ஏவப்பட்டது.

40 நாட்கள் பயணத்தின் பின்னர் இது நிலவின் தென் துருவத்தில் இந்தியாவை அடையாளப்படுத்தி தடம் பதித்தது.

'சந்திரயான் 3' விண்கலத்தில் இருந்து ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதியன்று நிலவின் சுற்றுவட்டப்பாதையில் உந்துவிசைத் தொகுதியில் இருந்து விக்ரம் லேண்டர் தொகுதி வெற்றிகரமாகப் பிரிந்தது.

இந்நிலையில், சந்திராயன் -3 இன் வெற்றிப்பயணத்தை தொடர்ந்து தற்போது 'ஆதித்யா எல்-1' வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

125 நாட்கள் பயணத்தின் பின்னர் ஆதித்யா எல் -1 தனது ஆய்வுகளை ஆரம்பிக்கும் என இஸ்ரோ தகவல் வெளியிட்டுள்ளது. (அ)





# உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சர் பதவி நீக்கம்

கீவ், செப். 05

உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் ஒலெக்சி ரெஸ்னிகோவ் பதவியில் இருந்து நீக்கப்பட்டதாக அந்த நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்யா ஆக்கிரமிப்பு செயற்பாடு ஆரம்பிப்பதற்கு முன்னரே ஒலெக்சி ரெஸ்னிகோவ் அமைச்சரவையில் அங்கம் வகிக்கின்றார்.

உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சில் புதிய அணுகுமுறையை ஏற்படுத்த இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மேலும் உக்ரைனின் பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவிக்கு ரஸ்டம் உமெரோவ் என்ற நபரை உக்ரைன் ஜனாதிபதி பரிந்துரை செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார். (அ)

# ரஷ்யா, பெலாரஸ், ஈரான் தூதர்களுக்கு நோபல் பரிசு விழாவில் பங்கேற்க தடை



ஒஸ்லோ, செப். 05

சுவீடனில் இடம்பெறவுள்ள நோபல் பரிசு வழங்கும் விழாவில் கலந்து கொள்ள ரஷ்யா, பெலாரஸ் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் தூதர்களை அழைப்பு விடுக்க போவதில்லை என நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு, உக்ரைன் மீதான படையெடுப்பு காரணமாக, ரஷ்யா மற்றும் அதன் நட்பு நாடான பெலாரஸ் தூதர்களை நோபல் அறக்கட்டளை புறக்கணித்திருந்தது.

இந்த நிலையில், கடந்த 31ஆம் திகதி வெளியிட்ட அறிவிப்பில் கடந்த ஆண்டு புறக்கணிக்கப்பட்ட நாடுகளின் தூதர்கள் இந்த ஆண்டு அழைக்கப்படுவார்கள் என தெரிவித்திருந்தது.

நோபல் அறக்கட்டளையின் இந்த அறிவிப்புக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

உக்ரைன் மீதான ரஷ்யவின் படையெடுப்பு, ஈரான் அரசின் மனித உரிமை மீறல் மற்றும் பெலாரஸ் ஜனாதிபதியின் சட்டவிரோத ஆட்சி ஆகிய வற்றை கண்டிக்கும் விதமாக இந்த விழாவை புறக்கணிப்பதாக தெரிவித்தனர்.

இதனையடுத்து, ரஷ்யா, ஈரான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளின் தூதர்கள் ஸ்டாக்ஹோமில் நடக்க உள்ள நோபல் பரிசு வழங்கும் விழாவில் கலந்து கொள்ள தடை விதிக்கப்படுவதாக நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது.

# ஆபத்தான கட்டங்களில் இயங்கும் 150 பாடசாலைகள் பிரிட்டனில் மூடல்!

லண்டன், செப். 05

பாதுகாப்பு கருதி ஆபத்தான நிலையில் உள்ள கட்டடங்களில் செயல்படும் 150 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன

இங்கிலாந்தில் கோடைவிடுமுறை முடிந்து அடுத்த வாரம் பாடசாலைகள் தொடங்கவுள்ளன. இந்த நிலையில் அங்கு பெரும்பாலான பாடசாலைகள் ஆபத்தான சிமெந்து கட்டடத்தில் செயல்படுகின்றன என்று கூறப்படுகிறது. இதனால் பள்ளி கட்டடம் இடிந்து விழுந்து மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

இதனையடுத்து மாணவர்களின் பாதுகாப்பு கருதி ஆபத்தான நிலையில் உள்ள கட்டடங்களில் செயல்படும் 150 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

கல்வி நடவடிக்கை பாதிக்கப்படாமல் இருக்க வேறு இடங்களில் அந்தப் பாடசாலைகள் செயல்படுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அந்த நாட்டின் கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)

# சுரங்கம் இடிந்து 6 பேர் பலி!

டாம்கான், செப். 05

ஈரானின் வடக்கு பகுதியில் உள்ள டாம்கான் நகரில் உள்ள ஒரு நிலக்கரி சுரங்கத்தில் நேற்று வெடிவிபத்து ஏற்பட்டது. 400 மீற்றர் ஆழத்தில் உள்ள சுரங்கப் பாதையில் ஏற்பட்ட இந்த விபத்தில், சுரங்கத் தின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது. அந்தப் பகுதியில் 6 தொழிலாளர்கள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

ஆனால், அவர்களை உயிருடன் மீட்கும் முயற்சி தோல்வியடைந்தது. நேற்று 6 பேரின் உடல்களும் மீட்கப்பட்டன என்று அரசு ஊடகம் தெரிவித்துள்ளது. விபத்து குறித்து விசாரணை நடத்த தொழிலாளர் நலத்துறை மந்திரி உத்தரவிட்டுள்ளார்.

இதேபோல் கடந்த 2021 ஆம் ஆண்டு இதே சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் 2 தொழிலாளர்கள் இறந்தனர். 2017இல் ஆசாத் ஷாஹர் நகரில் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 43 தொழிலாளர்கள் இறந்தனர். இதையடுத்து பொது மக்களின் கோபம் அதிகாரிகள் மீது திரும்பியது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரஷ்ய பிரசாரத்தை பரப்ப புதிய ருவிட்டரே உதவியது

## ஐரோப்பிய ஒன்றியம்



பிரஸ்சல்ஸ், செப். 05

எலோன் மஸ்க்கின் புதிய டுவிட்டர் கொள்கைகள் ரஷ்ய பிரசாரத்தை பரப்ப உதவியதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

எலான் மஸ்கின் புதிய டுவிட்டர் கொள்கைகள் ரஷ்ய பிரசாரத்தை சமாளிக்கத் தவறி விட்டதாக ஐரோப்பிய ஆணையம் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

ரஷ்ய பிரசாரத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான உறுதிமொழிகள் இருந்த போதிலும், அத்தகைய தளங்களில் தவறான தகவல்கள் சுலபமாக பரப்பப்பட்டதாக குற்றம் சாட்டப்படுகிறது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டில் இருந்து கிரெம்ளினின் கொள்கைகளை ஆதரிக்கும் மக்கள் ஐரோப்பா முழுவதும் கணிசமாக உயர்ந்துள்ளதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாஜி படையால் கொல்லப்பட்டோருக்காக ரூ. 450 கோடி இழப்பீடு வழங்க உத்தரவு!

ரோம், செப். 05

கடந்த 1943ஆம் ஆண்டு ஜேர்மனியின் நாஜிப் படையினர், இத்தாலியை ஆக்கிரமித்தனர். அப்போது அவர்கள் ஏராளமான இத்தாலி மக்களை கொன்றனர்.

அந்த சமயத்தில், நாஜி படையை சேர்ந்தவர் கொல்லப்பட்டதற்காக, இத்தாலி மக்களுக்கு பொது தண்டனை வழங்க நாஜி படை முடிவு செய்தது. இத்தாலி மக்களில் 6 பேரை தேர்ந்தெடுத்து அவர்களை பொது இடத்தில் வைத்து நாஜி படை தூக்கிலிட்டது. இந்நிகழ்வு நடைபெற்று 80ஆண்டுகளாகின்றன. இந்நிலையில், இந்த கொடூர சம்பவத்துக்கு இழப்பீடு வழங்க இத்தாலி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதன்படி, கொல்லப்பட்ட 6 பேரின் குடும்பத்தினருக்கு 1.3 கோடி டொலர் (சுமாராக ரூ. 450 கோடி) இழப்பீடு அறிவிக்கப்பட்டுள்ளது.

இழப்பீடு அறிவிக்கப்பட்டவர்களில் ஒருவரான மௌரோ பெட்ரார்கோ கூறுகையில், "எங்களால் அந்தத் துயரை கடந்து வரமுடியவில்லை. ஒவ்வோர் ஆண்டும் அந்த நாளில் துக்கம் அனுசரிக்கிறோம்" என்றார். (ஐ)

# இந்திய மீனவர் மீது தாக்குதல் இலங்கை அரசின் கவனத்துக்கு!

சென்னை, செப். 05

**தமிழக மீனவர்கள் அண்மையில் தாக்கப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.**

பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் குப்புசாமி அண்ணாமலைக்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் அனுப்பிவைத்துள்ள பதில் கடிதத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 4 இந்திய மீனவர்கள் மீது கடந்த மாதம் 22 ஆம் திகதி இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஆற்காடு துறையில் இருந்து தென்கிழக்கில் 22 கடல் மைல் தொலைவில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீதான இந்த தாக்குதலின் போது 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் சேதமடைந்தன என்று அந்த செய்திகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக தாம் அனுப்பியிருந்த கடிதத்திற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் அனுப்பியுள்ள பதில் கடிதத்தை பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவர் குப்புசாமி அண்ணாமலை சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் உடனடியாக இலங்கை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்போது சம்பவம் தொடர்பில் ஆழ்ந்த கவலையையும் இந்திய தூதரகம் தெரிவித்துக் கொண்டாக அவர் கூறியுள்ளார்.

மீனவர்களுக்கு எதிரான தாக்குதல்களை மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறும் தகவல்களை வழங்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் இந்திய தூதரகம் கோரியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரின் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 40 பேருக்கு மீன்பிடி உபகரணங்கள்!




முல்லைத்தீவு, செப். 05

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு தலா 45 ஆயிரம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற் றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி கொக்குத்தொடுவாய் தெற்கு அளம்பில் தெற்கு, அளம்பில்வடக்கு செம்மலை கிழக்கு, கள்ளப்பாடு வடக்கு கள்ளப்பாடு தெற்கு உள்ளிட்ட கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த-மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்டவர்களில் தெரிவு செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கே குறித்த மீன்பிடி உபகர ணங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் கண்காணிப்பு அலுவலர் சூ.செ.ஜான்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ. உமாமகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ( காணி) சி.குணபாலன், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலரும் கலந்து கொண்டனர்

குறித்த திட்டத்தில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மாண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 172 பயனாளிகளுக்கு குறித்த உதவித் திட்டம் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை; மதில்மேல் பூனையாகவுள்ள சு.க.!



கொழும்பு, செப். 05

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கட்சி இன்னும் முடிவெடுக்கவில்லை என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கட்சி எவ்வாறானதொரு முடிவை எடுக்கும் என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மைத்திரி இவ்வாறு கூறினார்.

“இவ்விவகாரம் தொடர்பில் இன்னும் முடிவெடுக்கவில்லை. பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது. நேரம்வரும் போது முடிவெடுக்கப்படும். அமைச்சரவை மாற்றுவதால் பிரச்னை தீருமா என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும்.” எனவும் மைத்திரி குறிப்பிட்டார்.



# சாமிமலையில் கடும் காற்று

கொழும்பு, செப். 05

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை, ஸ்ரஸ்பி தோட்ட அவரவத்தை பிரிவில் நேற்று முன் தினம் இரவு வீசிய கடும் காற்றால், லயன் குடியிருப்பு கூரைகள் அள்ளுண்டு சென்றன.

இதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், அவர்களின் உறவுகளின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளன.

மலையகத்தில் பல பகுதிகளிலும் சீரற்ற காலநிலை நிலவிவருகின்றது. நுவரெலியா மாவட்டத்தில் சில இடங்களில் மண்சரிவு சம்பவங்களும் பதிவாகியுள்ளன. (அ)

# பல மில்லியன் டொலர்கள் பெறுமதி கொண்ட கனிய மணல் இலங்கையில் இருந்து ஏற்றுமதி!



கொழும்பு, செப். 05

வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அதிக பெறுமதியுடைய பெருமளவிலான கனிய மணலை இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது. நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெறப்பட்ட 30 ஆயிரம் மெற்றிக் தொன் கனிய மணலே சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனம் மேற்கொண்ட சர்வ தேச அளவிலான கேள்விமனுக் கோரல் ஊடாக சீன நிறுவனம் ஏற்கனவே தெரிவு செய்யட்டி ருந்த நிலையில், திருகோணமலை துறைமுகத்தின் அஷ்ரப் இறங்கு துறையில் இருந்து அதனை கப்பலேற்றும் நடவடிக்கைகள் கடந்த சில நாட்களாக இடம்பெற்றன.

சீன நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதியாக புத்தளம் இல்மனைற் நிறுவனம் செயற்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தில் இடம்பெற்ற கப்பலேற்றும் நிகழ்வில் புத்தளம் இல்மனைட் நிறுவனத்தின் பொது முகாமையாளரும் கனிம அகழ்வுத்துறை நிபுணருமான றையான் றொக்வூட் விளக்கமளிக்கையில்,

இலங்கை வழமையாக இறக்குமதிகளையே மேற்கொள்கின்றது. ஆனால் இப்போது எமது நாட்டிலேயே அகழப்பட்ட கனிய மணலை ஏற்றுமதி செய்கின்றோம்.

இது ஒரு சிறப்பு வாய்ந்த ஏற்றுமதியாகும். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இக்காலத்தில் இடம்பெறும் இந்த ஏற்றுமதி மூலம் பல மில்லியன் டொலர் அந்நியச் செலாவணி இலங்கைக்கு கிடைக்கின்றது.

நாட்டின்டொலர்பிரச்னையை தீர்ப்பதற்கு இது பங்களிப்பை வழங்கும்-என்றார்.

இது குறித்து இலங்கை கனிப்பொருள் மணல் நிறுவனத்தின் பதில் பிரதி பொது முகாமையாளரான எஸ். ராஜகுரு கூறுகையில், 65 வருடங்களுக்குப் பிறகு இவ்வாறான பாரிய ஏற்றுமதி ஒன்றை நாம் மேற்கொள்கின்றோம்.

சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மேற்கொள்ளபட்ட விலைமனுக் கோரலில் அதிக விலையை கூறியிருந்த சீன நிறுவனத்திற்கே இது ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அரச நிறுவனம் என்ற வகையில் இது பெரிய வெற்றியாகும்-என்றார்.

இதேவேளைரூபவ் இலங்கையின் முதலாவதும் உலகத் தரம் வாய்ந்ததுமான கனிப்பொருள் பதப்படுத்தல் வசதியை நிறுவுவதற்கு புத்தளம் இல்மனைற் லிமிட்டெட் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. (அ)

# இலங்கையில் 55 சதவீதமான மக்கள் கல்வி, சுகாதாரம், பேரிடர் ஆபத்தில்!

**கணக்கெடுப்பில் வெளியானது தகவல்**

கொழும்பு, செப். 05

நாட்டின் மக்கள் தொகையில் 55 சதவீதம் பேர் கல்வி, சுகாதாரம், பேரிடர் மற்றும் வாழ்க்கை நிலைமைகள் போன்றவற்றில் ஆபத்தில் இருப்பதாக சமீபத்திய கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டமும், ஒக்ஸ்போர்ட் வறுமை மற்றும் மனித அபிவிருத்திப் பிரிவும் இணைந்து நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கம் தொடர்பாக கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் இந்த வருடம் மார்ச் மாதம் வரை பல்வேறு அம்சங்களில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதன்படி, கல்வி, சுகாதாரம், அனர்த்தங்கள் மற்றும் வாழ்க்கைத் தரம் போன்றவற்றில் இலங்கையில் 10 பேரில் 06 பேர் ஆபத்தில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

## தமிழர்...

நாம் ஒருபோதும் இடமளியோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவரும் திருகோண மலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பி னருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள் ளார்.

"வடக்கு - கிழக்கு தமிழர்களின் தாய கம். எமது தாயகத்தின் தலைநகர் திரு கோணமலை. இங்கு தமிழர்களை ஒதுக்க அல்லது இல்லாதொழிக்க சிங் கள - பௌத்த அடிப்படைவாதிகள் பெரிய நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்து வருகின்றனர். அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது.

தமிழர்கள் பெருமளவில் வாழும் இடங்களில் பௌத்த விகாரைகள் எதற்கு? சட்டவிரோத சிங்களக் குடி யேற்றங்கள் எதற்கு? இந்த அடாவடிச் செயல்பாடுகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்." - என்றும் அவர் கூறினார். (ஐ)

## ராஜபக்ஷ...

இராணுவ உளவுத்துறை அதிகாரி யான சுரேஷ் சாலே மற்றும் இஸ்லாமிய அரசு டன் இணைந்த நபர்களுடன் ஒரு சதித் திட்டம் தீட்டுவதற்காக 2018இல் ஒரு சந்திப்பு இடம்பெற்றது எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

"இந்தச் சந்திப்பு இடம்பெற்றதுடன் சுரேஷ் சாலி என்னிடம் வந்து ராஜபக்ஷ க்களுக்கு தேவை இலங்கையில் பாது காப்பற்ற சூழல். அப்போதுதான் கோட் டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி யாவதற்கு ஒரே வழி" - எனக் கூறனார் என்று அன்சார் ஆசாத் மௌலானா தெரிவித் துள்ளார்.

"தாக்குதல் திட்டம் என்பது ஓரிரு நாள்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல. அது இரண்டு, மூன்று ஆண்டு களாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் இடம் பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்கு றுதி அளித்ததன் பேரில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தபோது சுரேஷ் சாலி இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார்" - என்றும் ஆசாத் மௌலானா அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 13 தொடர்பான...

திருத்தத்தை செயல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமரை சந்தித்துக் கலந்துரையாடிய போது தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதில், பொலிஸ் அதிகாரத்தை செயல் படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கிறன. அதனால் பொலிஸ் அதி காரம் தவிர ஏனைய அதிகாரங்களை செயல்படுத்த நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி இந் திய பிரதமர் மோடியிடம் தெரிவித்திருந் தார்.

இதேபோன்று 13ஆம் திருத்தத்தை செயல்படுத்துவதில் ஏதாவது தடைகள் ஏற்பட்டால், வடக்கு அபிவிருத்தி நடவ டிக்கைகளுக்காக தனியான வேலைத் திட்டம் ஒன்றை மேற்கொள்வ தாகவும் இந்திய பிரதமர் மோடியிடம் ஜனாதிப தி உறுதியளித்திருக்கிறார்.

வேறு ஜனாதிபதிகள் 13ஐ செயல் படுத்துவதில்லை என நாட்டில் தெரி வித்த அதேநேரம் இந்தியாவுக்கு சென்று 13 பிளஸ் என தெரிவித்து வந்திருக்கிறார் கள். ஆனால், ரணில் விக்கிரமசிங்க 13 தொடர்பாக நாட்டில் தெரிவித்து வரும் விடயங்களையே இந்திய பிரதமரிடமும் தெரிவித்திருக்கிறார்.

எனவே, அரசாங்கத்தில் இருக்கும் சிலர் அரசமைப்பின் 13ஆம் திருத்தம் தொடர் பாக என்ன கருத்தை தெரிவித்தாலும் 13 தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அர சாங்கத்தின் நிலைப்பாடு தெளிவா உள் ளது. ஜனாதிபதியின் நிலைப்பாட் டில் மாற்றம் இல்லை. 13ஐ செயல்படுத்த வேண்டும் என்பதில் ஜனாதிபதி அர்ப்ப ணிப்புடன் செயல்படுகிறார் - என்றார்

## மாணவர்களின்...

பல சிறுவர்கள் கைபேசிகளால் தமது வாழ்வை நாசமாக்கிக் கொண்டிருப்பதா கவும் இன்று அவர்கள் பாடசாலைக்கு கைபேசியைக்கூட எடுத்துச் செல்கின்ற னர் என்றும் இதன்போது இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## கணித...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதல் 6 இடங்களையும் உயிரியல் விஞ்ஞான பாடத்தில் மாவட்டத்தில் முதல் 5 இடங்களையும் இந்துக் கல்லூரியின் மாணவர்களே பெற்றுள்ளனர்.

2022 ஆண்டு உயர்தர பரீட்சை முடிவுகள் நேற்று பிற்பகல் வெளியா கின.நேற்றிரவு வரை கிடைக்கப்பெற்ற முடிவுகளின்படி,

யாழ். இந்துக் கல்லூரியில் பௌதிக விஞ்ஞான பிரிவில் 21 மாணவர் கள் 3 ஏ சித்தி பெற்றனர். இதில், சிறீ.சிநேகன், லெ.அபிசேக், ச. அபிசேகன், ப. தீபக், மு. முகமட் இஷாத், வி. கிஷாலன் ஆகி யோர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதல் ஆறு இடங்களைப் பெற்றனர்.

இதேபோன்று உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 10 மாணவர்கள் 3 ஏ சித்தி பெற்றனர். இதில், அ. வித்யாசாகர், க. பவித்ரன், நா. சாரங்கன், த. அமலன், ர. தனுசன் ஆகியோர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முதல் 5 இடங்களைப் பிடித்தனர். (ஐ)

## இலங்கையின்...

கவலைக்குரிய விசயமாக உள்ளது.

இந்தியாவின் ஜி 20 தலைவர் பதவி யானது கடன் பாதிப்புகளால் ஏற்படும் உலகளாவிய சவால்களை எதிர்கொள் வதில் குறிப்பிடத்தக்க முக்கியத்து வத்தை அளித்துள்ளதாகவும் இந்திய பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடன் நெருக்கடி அல்லது அதனை சந்தித்த நாடுகள் நிதி ஒழுக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கத் தொடங்கியுள்ளது. கடன் நெருக்கடி யால் சில நாடுகள் கடினமான காலங் களை எதிர்கொள்வதைப் பார்த்த ஏனைய நாடுகள் அந்த தவறான வழிகளை தவிர்ப்பதில் விழிப்புணர்வுடன் உள்ளன.

கடன் பிரச்னைகளை எதிர்கொண் டுள்ள நாடுகளுக்கு உதவ கடன் மறுசீர மைப்புக்கான கட்டமைப்பின் அவசி யத்தை இந்தியா தொடர்ந்தும் வலியு றுத்தி வருகிறது. இதனிடையே, உலகின் மிகப்பெரும் கடன் வழங்குநராக கருதப் படும் சீனா கடன் மறுசீரமைப்பு குறித்த சில திட்டங்களுக்கு தயக்கம் காட்டி வருகின்றது.

இந்த நிலையில், 70இற்கும் மேற் பட்ட குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் 32 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலர் கடன் சுமையை கொண்டுள்ளன என்று தெரிவிக்கப்படு கிறது. இதன்படி, சர்வதேச நாணய நிதியம், உலக வாங்கி மற்றும் ஜி-20 நாடுகளின் தலைமை ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் உலகளாவிய இறை யாண்மைக்கு கடன் தொடர்பான மாநாடு இந்த ஆண்டு முதற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இது முக்கிய பங்குதாரர்களிடையே தொடர்பை வலுப்படுத்தும் மற்றும் கடன் மறுசீரமைப்பை எளிதாக்கும்.

இந்தப் பிரச்னை குறித்து மக்களி டையே விழிப்புணர்வை அதிகரிப்பது இதுபோன்ற சூழ்நிலைகள் தொடர்ந்து நிகழாமல் இருப்பதை உறுதி செய்யும். கடன் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் பெரியளவிலான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. பல்வேறு நாடுகளின் மக்களி டையே விழிப்புணர்வை அதிகரிப்பது இதுபோன்ற சூழ்நிலைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்யும் என்பதில் தாம் உறுதியாக இருக்கிறார் என்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

# இறுதி போரில் தந்தையை இழந்த மாணவி 3 ஏ சித்தி!

### முல்லைத்தீவு மாவட்டத்திலும் முதலிடம்

முல்லைத்தீவு, செப். 05

இறுதிப் போரில் தந் தையை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்த டொறின் ரூபகாந் தன் என்ற மாணவி வர்த் தக பாடத்தில் முல்லைத் தீவு மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

உயர்தர பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. இதில், முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவியான டொறின் ரூபகாந்தன் வர்த்தக பிரிவில் 3 பாடங்களிலும் 3 ஏ சித்தி பெற்றார். (ஐ)



# சஜித்தைக் கொல்வதில் எவருக்கும் ஆர்வம் இல்லை

கொழும்பு, செப். 05

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேம தாஸவின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவிக்கப்பட்ட கருத் துக்கு பதிலளித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, சஜித் பிரேமதாஸவைக் கொல்வதில் எவருக்கும் ஆர்வம் இல்லை என தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த ரங்கே பண்டார, "பிரேமத ாஸவைக் கொல்வதில் யாருக்கும் ஆர்வம் இல்லை. நாங்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதில்லை," என்றார்.

"எவ்வாறாயினும், ஒரு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஒரு முஸ்லிம் மற்றும் அடிக்கடி ஊடக சந்திப்புகளை நடத்து பவர், பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என முடிவு செய்துள்ளதாக எனக்குத் தெரி வித்தார். பிரேமதாஸ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக கூறும்போது பகிரங்கமாக பொய் சொல்கிறார் என இந்த பாராளுமன்ற உறுப்பினர் என்னிடம் கூறினார்" எனவும் ரங்கே பண்டார தெரிவித்தார்.

மேலும், கடந்த காலங்களில் பிரேமதாஸ எப்படி நடந்துகொண்டார் என்பதை நாங்கள் அனுபவித்துள்ளோம். அவர் கரு ஜயசூரியவை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு ஒரு முறை போட்டியிட செய்தார், பின்னர் முன்னாள் ஜனாதிபதி விலகியபோது புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வ தற்கான வாக்கெடுப்பு நடைபெற்ற போது டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைத்தார் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## பரு.ஹாட்லி...

மாணவரும் 3 ஏ சித்திகளை பெற்றுள் ளார்.

இதேசமயம், பொறியியல் தொழில் நுட்ப பாடத்தில் அன்பழகன் திவான் பிரபாகர் 2 ஏ, பி சித்தி பெற்று யாழ். மாவட்டத்தில் முதல் இடத்தைப் பெற் றுள்ளார். (ஐ-02)

## நீதிபதிகள்...

நீதிமன்றத்தின் நீதிபதிகள்கூட பகிரங்கமாக விமர்சித்துள்ளனர். ஜனாதி பதி தலைமையிலான அரசாங்கம் நீதி மன்றத்தின் மீது பல்வேறு அச்சுறுத்தல் கள், பல்வேறு குறுக்கீடுகள், அழுத்தங் கள் போன்றவற்றைச் செய்வதை நீதிபதி களே பகிரங்கமாக ஏற்றுள்ளனர்.

நாட்டில் சட்டத்தின் ஆட்சி, ஜன நாயகம் மற்றும் மக்கள் இறைமைக்காக வலுவான மற்றும் உறுதியான நிலைப் பாட்டை நிலைநிறுத்துவதற்கு நீதிமன் றமும் நீதிபதிகளும் முன்னின்றமைக்கு நன்றியையும் மரியாதையையும் தெரி வித்துக் கொள்கிறோம்.

நீதிமன்றத்தின் மீதான இந்த வெட் கமற்ற செயலை அரசாங்கம் உடனடி யாக நிறுத்த வேண்டும். நீதித்துறையில் செலுத்தப்படும் ஒவ்வொரு செல்வாக் கும் இந்நாட்டின் ஜனநாயகத்தை அழிக்கும் பெரும் சதியாகும்.

இந்நாட்டில் மாற்று அரசாங்கமும் முற்போக்கான எதிர்க்கட்சியாகவும் ஐக்கிய மக்கள் சக்தி தடைகள் மற்றும் சவால்களை முறியடித்து, அதிகார பகிர்வு போன்ற கருத்துகளின் மூலம் ஜனநாயகத்தின் மூன்று தூண்களான சட்டமன்றம், நிறை வேற்று மற்றும் நீதித்துறையை பலப் படுத்தி நாட்டு மக்கள் சார்பாக நாட்டின் உச்ச சட்டத்தின் பாதுகாவலர்களாக செயல்படுகிறது. பாரபட்சமின்றி வெளிப்படைத் தன்மையுடன் நீதிமன் றத்தின் நீதிபதிகளால் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவுகளையும் பாதுகாப்ப தற்காக மக்கள் பிரதிநிதிகளாக எதிர்க் கட்சி முன்னிற்கும் - என்றும் உள்ளது. (ஐ)

## சீரற்ற...

4 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாவலப்பிட்டியில் மண் மேடு சரிந்து ஒருவர் உயிரிழந்தார். நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதேபோன்று, ஜின் ஆற்றில் குளிக் கச்சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரி ழந்தார். மேலும், ரக்வான துலி நீர்வீழ்ச் சியில் இருந்து தவறி விழுந்து மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந் தார்.

இதனிடையே, பண்டாரகமையில் வீட்டின் கூரை இடிந்து வீழ்ந்ததில் வயோதிப பெண் ஒருவர் படுகாயம டைந்துள்ளார் என்றும் தெரிய வந்துள் ளது. (ஐ)

## ஏ.எல்...

நாயகம் எம். ஜே. எம். அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

http://www.doenets.lk அல்லது http://www.results.exams.gov.lk ஆகிய இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தி யோகபூர்வ இணையத்தளங்களில் பெறு பேறுகளை பார்வையிட முடியும்.

2022ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உயர்தரப் பரீட்சைகள் கடந்த ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17 வரை நடைபெற் றது. 2 இலட்சத்து 63 ஆயிரத்து 933 பேர் பரீட்சைக்கு தோற்றினர். இதில், ஒரு இலட்சத்து 66 ஆயிரத்து 938 பேர் - 63.3 வீதத்தினர் பல்கலைக்கழகங்க ளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள் ளனர்.

இதேசமயம், 57 பாடசாலை பரீட் சார்த்திகளும் 25 தனிப்பட்ட பரீட் சார்த்திகளுமாக 82 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட் டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# படகுகளில் சென்று தமிழக தலைவர்களுடன் மீனவர் அத்துமீறல் குறித்து பேச்சுவார்த்தை!

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 05

**இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர்.**

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இது குறித்து சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ், கருத்து தெரிவிக்கையில்-

கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறலை கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்ட செயலாளரிடம் மகஜரொன்றை கையளித்தோம்.

குறித்த மகஜர் கையளித்து 14 நாட்களுக்குள் இந்திய கடற்றொழிலாளர்களின் பிரச்னைக்கு தீர்வு காணப்படாவிடில் வடபகுதி மீனவர்கள் 14 பேர் கடல் வழியாக படகு மூலம் தமிழகம் சென்று, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பா.ஜ.க. தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரை சந்தித்துப் பேச தீர்மானித்துள்ளோம்-என்றார். (அ)

# லிற்றோ காஸின் விலை 145 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, செப். 05

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிற்றோ சமையல் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று லிற்றோ நிறுவனம் அறிவித்தது.

இதன்படி 12.5 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 145 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 05 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 58 ரூபாவாலும், 2.3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டரின் விலை 26 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 தடவைகள் விலை குறைக்கப்பட்டது. தற்போது உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரித்துள்ளபோதிலும் சிறு அளவு அதிகரிப்பே உள்நாட்டில் ஏற்பட்டுள்ளது என லிற்றோ நிறுவன தலைவர் குறிப்பிட்டார்.

# சீரற்ற காலநிலை காரணமாக ஐ. தே. க. மாநாடு ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 05

சீரற்ற காலநிலையால் ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டை ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

கட்சி அமைப்பாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைக்கமையவே இந்த முடிவை கட்சியின் நிர்வாகக் குழு எடுத்துள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு நடத்தப்படவிருந்தது. மாநாடு பிற்போடப்பட்டுள்ளதால் புதிய திகதி விவரம் விரைவில் அறிவிக்கப்படும். (அ)

# உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கவேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை



கொழும்பு, செப். 05

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை பிற்போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் உரிமைகளையும் நடைமுறைச் சூழலையும் புறக்கணிக்கும் வகையில் பரீட்சை திணைக்களம் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2022 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படாத நிலையில், 2023ஆம் ஆண்டுக்கான பரீட்சை நவம்பரில் நடத்தப்பட்டால், மாணவர்கள் பாரிய அநீதிக்கு ஆளாக நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், நவம்பர் மாதத்தில் பரீட்சையை திட்டமிடுவதால், இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராவதற்கு இரண்டு மாதங்களுக்கும் குறைவான கால அவகாசமே கிடைக்கும் என சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

எவ்வாறாயினும் பாடப்பிரிவுகளை மாற்றி மீண்டும் பரீட்சைக்கு அமர்கின்ற மாணவர்களுக்கு இந்த கால அவகாசம் போதாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

# பளையிலிருந்து துப்பாக்கியுடன் தப்பிச்சென்ற இராணுவ சிப்பாய்

## ரயிலுக்குள் நேற்று பரபரப்பு சம்பவம்

கொழும்பு, செப். 05

பளை இராணுவ முகாமிலிருந்து இரகசியமாக துப்பாக்கியை எடுத்துச் சென்ற இராணுவச்சிப்பாய், மாங்குளத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது மனைவியுடனான குடும்பத் தகராறின் எதிரொலியாக, அவர் இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கியை எடுத்துச் சென்றுள்ளது தெரிய வந்துள்ளது.

குருநாகல் பகுதியை சேர்ந்த 26 வயதான இராணுவச் சிப்பாயே கைது செய்யப்பட்டுள்ளார்.

பளையிலுள்ள கவசப்படைப் பிரிவை சேர்ந்த இராணுவச்சிப்பாய் நேற்று விடுமுறையில் வீடு சென்றுள்ளார். எனினும், அவரது கடமை துப்பாக்கியை அவர் ஒப்படைக்கவில்லை. இது குறித்து ஆய்வு செய்த இராணுவத்தினர், சிப்பாய் துப்பாக்கியுடன் வெளியேறியிருக்கலாம் என சந்தேகித்தனர்.

உடனடியாக பளை ரயில் நிலையத்திற்கு சென்றபோதும், சிப்பாய் அங்கிருக்கவில்லை.

இதேவேளை, பளையில் இருந்து ரயிலில் ஏறினால் சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதால், கொடிகாமத்துக்கு சென்று ரயிலில் ஏறியுள்ளார் சிப்பாய்.

பளை இராணுவத்தினர் கொடிகாமத்துக்கு நேடி வந்தபோது, கொடிகாமத்திலிருந்து ரயில் புறப்பட்டிருந்தது. இதையடுத்து, பளை ரயில் நிலையத்திலிருந்து சிவில் உடையில் இராணுவ அணியொன்று ரயிலில் ஏறியது.

அவர்கள் ரயிலில் தேடுதல் நடத்தினார்கள். கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் ரயில் பயணித்துக் கொண்டிருந்தபோது, இராணுவச்சிப்பாயை அவர்கள் அடையாளம் கண்டனர்.

இதையடுத்து, இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டு, மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்து, சிப்பாய் ரயிலில் இருந்து இறக்கப்பட்டு கைது செய்யப்பட்டார். ரி-56 ரக துப்பாக்கி அவரது பயணப்பையிலிருந்து மீட்கப்பட்டது. 4 மகசீன்களும் மீட்கப்பட்டன.

மாங்குளம் ரயில் நிலையத்தில் வைத்து, இராணுவப் பொலிஸார் அவரிடம் நடத்திய முதற்கட்ட விசாரணையில், குடும்பத் தகராறின் எதிரொலியாக துப்பாக்கியை கொண்டு சென்றதாக தெரிவித்துள்ளார்.

இராணுவச்சிப்பாயின் மனைவி, தற்போது அவரை விட்டு பிரிந்து சென்று காதலனுடன் வாழ்ந்து வருகிறார். காதலன் தன்னை தொடர்ந்து, மிரட்டி வருவதாகவும், இதனால் பழிவாங்குவதற்காக துப்பாக்கியை எடுத்துச் சென்றதாகவும் சிப்பாய் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட சிப்பாய் பளை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் நடந்து வருகின்றன. (அ)

# 25ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க?



கொழும்பு, செப். 05

இலங்கை இராணுவத்தின் 25ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக அரசாங்கத்தின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேயின் சேவை நீடிப்பு டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதுடன், அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க ஒக்ரோபர் 13ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்கவின் சேவையை நீடிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளதாகவும், விக்கும் லியனகேயுக்குப் பின்னர் அவரை இராணுவத் தளபதியாக்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும் அரசாங்கத் தகவல்கள் மேலும் கூறின.

அவர் எந்தவித ஊழல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாததும், தனது சேவைக் காலத்தில் ஒழுக்க மீறல்களில் ஈடுபடாததும் இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.

சஞ்சய் வனசிங்க, தற்போது இராணுவத்தின் தலைமை அதிகாரியாகவும் செயல்பட்டு வருகிறார்.

மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க கொழும்பு ஆனந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவர் என்பதுடன், இவர் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவின் மூத்த மகனும் ஆவார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



ஆசிய கிண்ணத் தொடர்

## ஆப்கானை வீழ்த்தியது பங்களாதேஷ் அணி!

லாகூர், செப். 05

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான லீக் போட்டியில் 89 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது. மெஹதி ஹசன் மிராஸ், ஷன்டோ ஆகியோர் சிறப்பாக விளையாடி சதம் விளாசினர்.

ஆசிய கிண்ணத் தொடர் இலங்கை, பாகிஸ்தானில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் லாகூரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஆப்கானிஸ்தானுக்கு எதிராக பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 334 ஓட்டங்கள் குவித்தது. நயீம் 28, தவ்ஹீத் ஹிருதோய் 0, முஷ்பிஹூர் ரஹீம் 25, ஷமிம் 11 ஓட்டங்கள் எடுத்தனர்.

ஆனால், அதிரடியாக விளையாடிய மெஹதி ஹசன் மிராஸ் 119 பந்துகளில் 112 ஓட்டங்கள் குவித்து காயம் காரணமாக வெளியேறினார். மற்றோர் அதிரடி ஆட்டக்காரர் ஷன்டோ 105 பந்துகளில் 104 ஓட்டங்களை விளாசினார். பின்னர் 335 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் விளையாடத் தொடங்கியது.

இருப்பினும், 44.3 ஓவர்களில் 245 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து தோல்வியை தழுவியது ஆப்கானிஸ்தான்.

அந்த அணியின் இப்ராஹிம் சத்ரான், அணித் தலைவர் ஹஷ்மத்துல்லா ஷாஹிதி ஆகியோர் அரைச்சதம் கடந்தனர். (ஐ)

## இங்கிலாந்து அணிக்கு நியூசிலாந்து பதிலடி!

பர்மிங்ஹாம், செப். 05

இங்கிலாந்தில் பயணம் மேற்கொண்டு 4 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் ஆடி வரும் நியூசிலாந்து முதல் 2 இருபது -20 தொடரில் இங்கிலாந்திடம் தொடர்ந்து தோல்வியைத் தழுவியது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆவது போட்டியில் பழிக்குப் பழி வாங்கும் விதமாக இங்கிலாந்தை 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 2-1 என்று உயிர்ப்புடன் தக்க வைத்துள்ளது. எனவே, அடுத்த போட்டியிலும் நியூசிலாந்து வெற்றால் தொடரை சமன் செய்துவிடும்.

பர்மிங்ஹாமில் நடைபெற்ற 3ஆவது இருபது -20 தொடரில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பின் அலன் (83 ஓட்டங்கள்), கிளென் பிலிப்ஸ் (69) ஆகியோரின் அதிரடி ஆட்டத்தால் 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 202 ஓட்டங்கள் குவித்தது. இலக்கை விரட்டிய அதிரடி இங்கிலாந்து 128 ஓட்டங்களுக்கு சுருண்டது.

நியூஸிலாந்து அணியில் தொடக்க அதிரடி வீரர் பின் அலன் 53 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள் 6 சிக்ஸஸர்களுடன் 83 ஓட்டங்கள் எடுத்தார், கிளென் பிலிப்ஸ் 34 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள் 5 சிக்ஸர்களுடன் 69 ஓட்டங்கள் விளாசினார். பந்து வீச்சில் நீண்ட இடைவெளிக்கு பிறகு வந்த கைல் ஜேமிசன் 3 விக்கெட்களையும் இஷ் சோதி 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

நியூசிலாந்து அணி 4ஆவது ஓவரில் டெவன் கொன்வே (9) விக்கெட்டை இங்கிலாந்துக்கு ரன் அவுட் மூலம் தாரை வார்த்தது. பின் அலனும், கிளென் பிலிப்ஸும் 8 ஓவர்களில் 88 ஓட்டங்களைச் சேர்த்தனர். இடையில் டிம் செய்பர்ட் 19 ஓட்டங்களில் லிவிங்ஸ்ரன் பந்தில் பட்லர் ஸ்ரொம்ப் செய்ய ஆட்டமிழந்தார். ஆனால், இந்த 88 ஓட்டங்கள் இணைப்பாட்டம் நியூசிலாந்துக்கு பெரும் உறுதுணையாக அமைந்தது.

15ஆவது ஓவரை ஆதில் ரஷீத் வீசினார். அலன் 3 நேர் சிக்ஸர்களை விளாசினார். பிறகு லிவிங்ஸ்ரனும் ஒரு பெரிய சிக்ஸர் விளாசி 35 பந்துகளில் 50 ஓட்டங்களை எட்டினார் பின் அலன். மறுமுனையில் 27 பந்துகளில் அரைச்சதம் கண்ட கிளென் பிலிப்ஸ் 18ஆவது ஓவரில் லிவிங்ஸ்ரனை ஒரு கை பார்த்தார். இவரும் 3 சிக்ஸர்களை விளாசினார்.



இங்கிலாந்தின் பந்து வீச்சில் வேகப்பந்து வீச்சாளர் கஸ் அட்கின்சன் 2 விக்கெட்களை 31 ஓட்டங்களுக்குக் கைப்பற்றினார். இதில் கிளென் பிலிப்ஸை துல்லிய யோர்க்கரில் வீழ்த்தினார்.

இங்கிலாந்து அணி பவர் பிளேயில் வில் ஜாக்ஸ் (11), டேவிட் மலன் (2) விக்கெட்களை பறிகொடுத்தது. பவர் பிளேயில் இங்கிலாந்து 30 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. பெயர்ஸ்ரோவும் 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 2015ஆம் ஆண்டுக்கு பிறகு பவர் பிளேயில் இங்கிலாந்து எடுக்கும் 3ஆவது ஆகக்குறைந்த ஓட்டம் இதுவே.

ஹாரி ப்ருக் இஷ் சோதி பந்தை கொடியேற்றி 8 ஓட்டங்களில் வெளியேறினார். அணித்தலைவர் பட்லர் 3 சிக்ஸ், 3 பௌண்ட்ரிகளுடன் 21 பந்துகளில் 40 ஓட்டங்களையும் 16 பந்துகளில் ஒரு பௌண்ட்ரி, 2 சிக்ஸர்களுடன் மொயின் அலியும் ஓட்ட எண்ணிக்கையை கொஞ்சம் உயர்த்தினர். ஆனால், 92/5 என்ற நிலையில் இருந்து 128 ஓட்டங்களுக்கு சுருண்டது இங்கிலாந்து.

கைல் ஜேமிசன் 3 விக்கெட்களை கைப்பற்றினார். (ஐ)

## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் முன்னேறினார் சபலெங்கா!



நியூயோர்க், செப். 05

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு அரினா சபலெங்கா, ஜெசிகா பெகுலா ஆகியோர் முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில், மகளிர் ஒற்றையர் பிரிவு போட்டிகளில், தரவரிசையில் இரண்டாம் நிலை வீராங்கனையான அரினா சபலெங்கா 6-1, 6-1 என்ற நேர் செற்களில் பிரான்ஸ் வீராங்கனை கிளாரா புரேலைச் சாய்த்தார். இதன் மூலம் அவர் மகளிர் பிரிவு 4ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இதர போட்டிகளில், ரஷ்ய வீராங்கனை டாரியா கசட்கினா 6-3, 6-4 என்ற செற் கணக்கில் பெல்ஜியம் வீராங்கனை கிரீட் மினெனையும், அமெரிக்காவின் மேடிசன் கீஸ் 5-7, 6-2, 6-2 என்ற கணக்கில் ரஷ்யாவின் லுட்மிலா சாம்சனோவையும், அமெரிக்காவின் ஜெஸிகா பெகுலா 6-4, 4-6, 6-2 என்ற செற் கணக்கில் எலினா ஸ்விட்டோலினாவையும் வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினர். (ஐ)


## அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் அல்கராஸ் அடுத்த சுற்றில்!

நியூயோர்க், செப். 04

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு அல்கராஸ் நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடர் நியூயோர்க்கில் நடக்கிறது. இதில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்றுப் போட்டியில் ஸ்பெயினை சேர்ந்தவரும், முதல்நிலை வீரருமான கார்லோஸ் அல்கராஸ் 6-2, 6-3, 4-6, 6-3 என்ற செற் கணக்கில் பிரிட்டனின் டேனியல் இவான்ஸை வீழ்த்தினார்.

மற்ற 3ஆவது சுற்று போட்டிகளில் இத்தாலி வீரர் மேட்டியோ அர்னால்டி 6-3, 6-4, 6-3 என்ற செற் கணக்கில் பிரிட்டன் வீரர் கமருன் நோரியையும், ரஷ்ய வீரர் ஆந்த்ரே ரூப்லேவ் 3-6, 6-3, 6-1, 7-5 என்ற செற் கணக்கில் பிரான்ஸ் வீரர் ஆர்தர் ரின்டர்நெக்கையும் வீழ்த்தினர். (ஐ)






## போர்முலா - 1 பந்தயம் வெர்ஸ்டாபென் சாதனை

ரோம், செப். 05

போர்முலா வன் கார் பந்தயத்தின் இத்தாலியன் கிராண்ட் ப்ரீ ரேஸில் நெதர்லாந்து வீரரான மேக்ஸ் வெர்ஸ்டாபென் ஞாயிற்றுக்கிழமை வெற்றி பெற்றார்.

நடப்பு தொடரில் இது அவரது 12ஆவது வெற்றியாகும். மேலும் தொடர் 10ஆவது வெற்றி. ஒரு தொடரில் தொடர்ந்து 10 வெற்றிகளை பதிவு செய்த முதல் வீரர் என்ற பெருமையை வெர்ஸ்டாபென் பெற்றார். முன்னதாக, ஜேர்மனியின் செபாஸ்ரியன் வெட்டல் 9 வெற்றிகள் பெற்றதே அதிகபட்சமாக இருந்தது.

இந்தப் பந்தயத்தில் வெர்ஸ்டாபென் முதலிடம் பிடிக்க, அவரது சக ரெட் புல் பந்தய வீரருமான மொனாகோ வீரருமான செர்ஜியோ பெரெஸ் 2-ஆம் இடமும், ஃபெராரி பந்தய வீரருமான ஸ்பெயின் வீரருமான கார்லோஸ் செயின்ஸ் 3ஆம் இடமும் பிடித்தனர். நடப்பு சீசனில் 145 புள்ளிகள் முன்னிலையில் இருக்கும் வெர்ஸ்டாபென், சம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொள்ளும் நிலையில் இருக்கிறார்.

## தென்னாபிரிக்காவுடனான ரி-20 தொடர் முழுமையாக ஆஸி. வசம்

டர்பன், செப். 05

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது இருபது - 20 போட்டியில் அவுஸ்திரேலியா 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் ஞாயிற்றுக்கிழமை வென்றது.

3 போட்டிகள் கொண்ட தொடரை அந்த அணி 3-0 என முழுமையாகக் கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் முதலில் தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 190 ஓட்டங்கள் சேர்க்க, அடுத்து அவுஸ்திரேலியா 17.5 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழந்து 191 ஓட்டங் களை எட்டி வென்றது.

அவுஸ்திரேலியாவின் டிராவிஸ் ஹெட் ஆட்டநாயகன், மிட்செல் மார்ஷ் தொடர் நாயகன் விருது பெற்றனர்.

முன்னதாக நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி டொனோவன் பெரெய்ரா 48 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருக்க, அவுஸ்திரேலியாவின் ஷோன் அபொட் 4 விக்கெட்கள் கைப்பற்றினார்.

பின்னர், அவுஸ்திரேலிய இன்னிங்ஸில் ட்ராவிஸ் ஹெட் 91 ஓட்டங்கள் அடித்து அணியின் வெற்றிக்கு அடித்தளமிட்டார்.

தென்னாபிரிக்க தரப்பில் ஜோர்ன் ஃபோர்டுயின், ஜெரால்ட் கோட்ஸீ ஆகியோர் தலா 2 விக்கெட்கள் சாய்த்தனர்.



# மழைக் காடுகளை காக்க ஓர் உச்சி மாநாடு!

சிதம்பரம் இரவிச்சந்திரன்

அமேசான் நாடுகளின் தலைவர்கள் உலகின் மிகப் பெரிய மழைக் காடுகளைக் காப்பாற்ற தங்களுக்கு உதவுமாறு பணக்கார நாடுகளைக் கோரியுள்ளனர். பிலெம் (Belem) என்ற பிரேசில் நகரில் சமீபத்தில் இரண்டு நாட்கள் நடந்த உச்சிமாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் அமேசான் காடுகளைத் தாயகமாகக் கொண்டுள்ள எட்டு தென்னமெரிக்க நாடுகளின் தலைவர்கள் காடுகளைக் காக்க வேண்டிய பொறுப்பு தங்களுக்கு மட்டுமே உரியது இல்லை. இந்த வன வளங்களை உலகம் முழுமையும் பயன்படுத்திக் கொள்கிறது என்று கூறியுள்ளனர்.




அமேசான் ஒத்துழைப்பு உடன்படிக்கை அமைப்பைச் (ACTO) சேர்ந்த இந்த எட்டு நாடுகள் காடுகளைக் காக்கும் பிரம்மாண்டமான சுமையை தாங்கள் மட்டும் சுமக்க முடியாது என்று கூறியுள்ளனர். இறைச்சிக்காக காடுகள் அழிக்கப்பட்டு மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்படுதல், எண்ணெய் மற்றும் சுரங்கத் தொழில் போன்றவை அமேசானை அழிக்கும் முக்கிய காரணிகள். 2030ம் ஆண்டிற்குள் வன அழிவை முழுவதுமாக தடுத்து நிறுத்துவது பற்றி எந்த உடன்படிக்கையும் இந்நாடுகளுக்கு இடையில் ஏற்படவில்லை. தென் அமேரிக்கா என்றாலும் அமேசானைக் காக்க நீடித்த நிலையான வளர்ச்சிக்கு உதவும் பொருளாதார நடவடிக்கைகள், தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளில் இருந்து கூடுதல் நிதியுதவியைப் பெறுவதால் அமேசானைக் காப்பாற்ற முடியும் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. பிரேசில் மற்றும் கொலம்பியாவில் புதிய ஆட்சியாளர்கள் பொறுப்பேற்றதில் இருந்து கடந்த ஆண்டில் காடுகள் அழிக்கப்படுவது குறைந்துள்ளது.




கடன் தள்ளுபடி, மனித உரிமை மீறல்களைக் குறைப்பது, சட்டவிரோத சுரங்கத் தொழில் மற்றும் மாசுக்கட்டுப்பாடு போன்றவற்றை மேற்கொள்ள உலக நாடுகள் உதவ வேண்டும் என்று மாநாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்கு சூழல் சீரழிவுகளால் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடாக தருவதாகக் கூறிய நிதியுதவியை உடனடியாக வழங்கவும் இந்த நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

காடுகள் எங்களை இணைக்கிறது. எங்கள் கண்டத்தின் இதயத்தை நாங்கள் வலுப்படுத்த வேண்டும். இன்றும் என்றும் அமேசானின் அடையாளத்தை நாங்கள் காப்பாற்ற வேண்டும். அமேசானே எங்கள் உலகத் தொடர்புகளுக்கான புதிய பாஸ்போர்ட். ஒரு சிலர் மட்டுமே பயனடையும் வகையில் அமேசானின் வளங்கள் சுரண்டப்படுவது தடுக்கப்பட வேண்டும். புதிய முறைமையில் இதன் வளங்கள், சேவைகள் ஒவ்வொரு மனிதரையும் சென்றடைய வேண்டும்.

புவி வெப்ப உயர்வுக்குக் காரணமாக இருக்கும் புதைபடிவ எரிபொருட்களை அமேசானில் தேடுவதை நிறுத்த வேண்டும் என்று கொலம்பிய அதிபர் கஸ்ட்ராவோ பெட்ரோ கூறுகிறார். ஆனால் பிரேசில், வெனிசுவேலா, மற்ற எண்ணெய் உற்பத்தி நாடுகள் இந்தக் கருத்தை ஏற்கவில்லை. அமேசான் ஆறு உற்பத்தியாகும் இடத்திற்கு அருகில் எண்ணெய் தேடுவதற்காக பிரேசில் அரசின் பெட்ராப்ரஸ் எண்ணெய் நிறுவனம் அனுமதிகோரியுள்ளது. ஆனால் இது பற்றி பிரேசில் அரசு இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.



### வாழ்வுக்கான போராட்டத்தில் அமேசானின் காடுகள்

அமேசான் பிரதேசத்தில் உள்ள மற்றொரு நாடான கயானா, வரும் ஆண்டுகளில் இப்பிரதேசத்தின் அதிக எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடாக மாறத் திட்டமிட்டுள்ளது. மரணத்திற்கும் வாழ்வுக்கும் இடையில் எண்ணெய் வளம் மிக்க காட்டை அரசியல் எவ்வாறு காக்கப் போகிறது? இம்மாநாட்டில் எந்த உடன்படிக்கையும் ஏற்படாதது ஏமாற்றம் அளித்தாலும் வருங்கால நடவடிக்கைகளுக்கு இது ஒரு நல்ல தொடக்கம் என்று காலநிலை கண்காணிப்புக் குழுவின் செயலாளர் மார்ஸியோ அஸ்ட்ரினி கூறுகிறார்.

உருகும் பூமியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உயரும் வெப்பநிலையின் அளவுகள் தொடர்ந்து முறியடிக்கப்படுகிறது. இந்த நிலையில் அமேசானின் எட்டு நாடுகள் மட்டும் காடுகளை எவ்வாறு பாதுகாக்க முடியும் என்று பிரேசில் சுற்றுச்சூழல் அமைச்சர் மரைனா சில்வா கூறுகிறார். அமேசானைப் பகிர்ந்து கொள்ளும் நாடுகள் மீளமுடியாத அளவில் காடுகள் அழிவதைத் தடுத்து நிறுத்தும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இப்போது இருக்கும் காடுகளின் பரப்பில் 20 முதல் 25 வீதம் அழிந்தால் அது எப்போதும் மீட்கப்பட முடியாத நிலைக்கு அமேசானை இட்டுச் செல்லும். இந்த நிலை காட்டின் மரணத்தை குறிக்கிறது. அமேசானின் அழிவு என்பது பூமியின் மழைப்போக்கின் அழிவையேகுறிக்கிறது. உலகம் இன்னும் பாலைவனமாக மாறாமல் இருக்க ஒரே காரணம் அமேசான் மட்டுமே.

அமேசான் முதலாளித்துவத்திற்கு பலிகடா ஆக்கப்பட்டது. தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளே உலகில் உமிழப்படும் பசுமைக்குடில் வாயுக்களின் உமிழ்விற்கு முக்கிய காரணம்.



விவசாயத்திற்காக அமேசான் தொடர்ந்து அழிக்கப்படுகிறது. இதன் விளைவுகளை அமேசான் நாடுகள் மட்டும் அனுபவிக்கவில்லை. மாறாக உலகம் முழுவதும் அனுபவிக்கிறது.

### மழைக்காடுகளைக் காக்கும் ஒபெக் உடன்படிக்கை

ஐநாவின் உயிர்ப் பன்மயத்தன்மை மற்றும் காலநிலை மாற்றத்திற்கான காப் திட்டத்தின் கீழ் பிரேசில் காங்கோ குடியரசு மற்றும் இந்தோனேஷியாவுடன் காடுகளைக் காக்கும் நோக்கத்துடனான ஒபெக் எனப்படும் ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளது.

காடுகளை காப்பாற்றும் நோக்குடன் கூடிய இந்த உச்சிமாநாடு நாளை வரலாற்று ரீதியாக அமேசானைக் காக்கும் நல்லதொரு எதிர்காலத்தை ஏற்படுத்துவதில் முதல் படியாக அமையும் என்று சூழலியலாளர்கள் நம்புகின்றனர். ●

# உணர்வுசார் நுண்ணறிவும் உங்கள் குழந்தையும்

- ப. வைத்திலிங்கம்,
(குழந்தை மருத்துவ நிபுணர்)



குழந்தைகளைப் புத்திசாலித்தனத்துடன் வளர்த்து ஆளாக்கும் மிகப்பெரிய கடமை பெற்றோர்களுக்கு உள்ளது. புத்திசாலித்தனம் என்றதும் பெற்றோர்களுக்கு படிப்பு, மதிப்பீடு, மார்க் என்றுதான் நினைவு வரும். புத்திசாலித்தனத்திலும் பலவகைகள் உண்டு. அவைகளில் ஒன்றான உணர்வுசார் நுண்ணறிவு அல்லது எமோஷனல் இன்டெலிஜென்ஸ் பற்றி இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

மகிழ்ச்சி, துக்கம், பயம், கோபம், அருவருப்பு, ஆச்சரியம் என அனைத்து உணர்வுகளிலும் கோபம்தான் மனிதனுக்கு அதிகமான இழப்பை உண்டு பண்ணுகிறது. தன் பொறுப்புகளை உணர்ந்து, கோபத்தைக் கட்டுப்படுத்தி, உணர்ச்சிகளைக் கையாளும் திறமையை எமோஷனல் இன்டெலிஜென்ஸ் என்பார்கள்.

**ஒரு நிகழ்வு**

ஒரு காட்சியைக் கண்முன்னே கற்பனையாக்கிப் பாருங்கள். உங்களது 6 வயது குழந்தை ஒரு பொருளின் மீது ஆசைப்பட்டு வாங்கித் தரும்படி கேட்கிறது. நீங்கள் கிடையாது என்று கண்டிப்புடன் சொல்லும்போது, ஏமாற்றத்தைத் தாங்கமுடியாமல் கையில் உள்ள பொருளைத் தூக்கி எறிந்து உடைத்து விடுகிறது. தன்னுடைய கோபத்தையும் எரிச்சலையும், ஏமாற்றத்தையும் உங்களிடம் சொல்லத் தெரியாமல் உணர்வுகளால் தூண்டப்பட்டு செய்கிறது என்று எண்ணுவோம்.



அதே சூழலில் வேறொரு குழந்தை ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தாங்கிக்கொண்டு உங்களைக் கோபத்தோடு பார்த்துக்கொண்டே வார்த்தைகளால் தன் நிலையைச் சொல்லி காரணம் கேட்கிறது. இந்த இரண்டாவது குழந்தைக்கு உணர்வுசார் நுண்ணறிவும், கோபத்தைக் கையாளும் திறமையும் அதிகமாக இருக்கும்.

கோபம் வரும்போது தன்னைத்தானே அமைதிப்படுத்திக்கொண்டு கோபத்தைக் கட்டுப்படுத்தத் தெரிந்த குழந்தைக்குப் பின்னாளில் எந்த சூழலையும் சமாளிக்கும் திறன் வந்து விடுகிறது. தன் உணர்வுகளைப் பெற்றோர்களிடம் வார்த்தைகளால் வெளிப்படுத்தி அவர்களோடு விவாதிக்கும் குழந்தைகளால் நல்ல உறவுமுறையையும் ஏற்படுத்திக் கொள்ளத் தெரிகிறது. இம்மாதிரி குழந்தைகளுக்கு மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அதற்குத் தகுந்தவாறு தங்களுடைய உனர்வுகளை வெளிப்படுத்தி உடலும் மனமும் கெட்டுப் போகவிடாமல் ஆரோக்கியம் காக்கும் திறனும் தெரிந்து இருக்கிறது.

கோபத்தால் பொருளைத் தூக்கி அடிக்கும் குழந்தை இன்னும் மனதளவில் முதிர்ச்சி அடைய வேண்டியுள்ளது. தொடர்ந்து இதுபோன்று முதிராத உணர்வுசார் வெளிப்பாடு இருக்கும்போது சமூகத்தோடும் பெற்றோர்களுடனும் ஆன உறவுநிலையில் விரிசலும் வந்து விடுகிறது.

**கோபம் கொண்ட உடலில் என்ன நடக்கிறது?**

எல்லா உயிரினங்களும் எப்படியாவது இந்த உலகில் உயிர்பிழைத்து வாழ்ந்துவிட வேண்டும் என்ற அடிப்படை உயிரியல் உள்ளுணர்வுடன்தான் இருக்கும். அதற்கு ஆபத்து வரும்போதெல்லாம் கோபமும் இயல்பாகவே வந்து விடும். ஆகையால் மனிதனின் கோபத்தை, தனக்கு வெளியில் இருந்து வரும் ஆபத்தையும் மிரட்டலையும் எதிர்நோக்க, நிகழ்த்தும் எதிர்வினை என்றே கூறலாம்.

மனிதனுக்கு ஆபத்து என்று வந்தால் அதை சமாளிக்க வேண்டுமே! அவனின் உடலைத் தயார்படுத்த எமர்ஜென்சி ஹார்மோன்களான அட்ரினலின், நாரட்ரினலி அகிய இரண்டும் அபரிமிதமாக சுரக்க ஆரம்பித்து விடுகிறது. இவைகள் அவனை, பயப்படு அல்லது சண்டைபோடு அல்லது தப்பித்து ஓடு என்னும் காரியங்களுக்குத் தயாராக்கி விடு கிறது. எதைச் செய்ய வேண்டும் என்பதை சூழ்நிலை அவனுக்கு உணர்த்தி விடுகிறது. அதன் விளைவாக இதயம் வேகமாகத் துடிக்க, இரத்தம் உடலெங்கும் பீறிட்டுப் பாய, இரத்த அழுத்தம் மேலே ஏறுகிறது. சுவாசத்தின் ஆழமும் வேகமும் அதிகமாகி உடலுக்கு ஆக்சிஜன் அதிகமா கப் போய்ச்சேர ஏறக்குறைய அவன் உடல் சண்டை போடுவ தற்குத் தயாராகி விடுகிறது. என்ன நடக்கிறது என்ற சுய நினைவை இழக்க வார்த்தைகளும் உடல் மொழியும் எதிராளியை சண்டைக்கு இழுக்க ஆக்ரோஷமும் வன்முறையும் தொடர்ந்து வழிகேட்டு வந்து நிற்கிறது. கோபம் கொண்ட மனிதனின் உடலில் இவ்வளவும் ஒரு சில நிமிஷங்களில் நடக்கிறது!

அடிக்கடி கோபம் கொள்ளும் நபர்களுக்கு பிறருடன் இயல்பாகத் தொடர்பு கொள்ளும் கம்யூனிகேஷன் திறமை மிகவும் குறைவாக இருக்கும். வாழ்க்கையின் அன்றாடப் பிரச்னை களைத் தீர்க்கும் திறன் அற்று அடிக்கடி மற்றவர்கள் போய் சமரசம் செய்ய வேண்டி வரும். மாறும் சமூகச் சூழலுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக் கொள்ளத் தெரியாதவர்களாக இருப்பார்கள். எளிதில் பிறரின் தூண்டுதல்களுக்கு ஆளாகி அடிக்கடி கோபம் வரும். இவர்களுக்கு அதுவே பழக்கமாகி, நடத்தையும் மாறி, எதெற்கெடுத்தாலும் எரிச்சல், எதிர்ப்பு, கோபம் என்ற குணங்களோடு மனவியல்படி **OPPOSITIONAL DEFIANT DISORDER** என்ற நிலைக்கு வந்து விடுவார்கள்.

**குழந்தைகளின் கோபத்தை எப்படி கட்டுப்படுத்துவது?**

பெரியவர்கள் போல் அல்லாமல் குழந்தைகளுக்கு கோபம் வரும்போது வீட்டில் ஒரு பிரளயமே நடந்து விடுகிறது. ஏமாற்றத்தையும் எரிச்சலையும் எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீட்டையே ரணகளமாக்கி விடுகிறார்கள். அவர்களைக் கையாளும் பெற்றோர்கள் கீழே கொடுத்துள்ளவற்றை முயற்சித்துப் பார்க்கலாம்.



1. குழந்தைகள் மீது எப்போதும் கொஞ்சம் கரிசனமும் அன்பும் காட்டுங்கள். அவர்களின் கோபம், வலி, ஏமாற்றம் பற்றி புரிந்துகொள்ள உண்மையாக முயல வேண்டும். கோபம் கொள்ளும் குழந்தைக்கு தோல்வியையும் ஏமாற்றத்தையும் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் இன்னும் வரவில்லை. அதனால் வரும் மன உளைச்சலைக் கோபமாக்கி உங்கள் மேல் காட்டுகிறார்கள்.

2. குழந்தைகள் தங்கள் உணர்வுகளை வார்த்தைகளால் வெளிப்படுத்திச் சொல்ல ஊக்குவிக்க வேண்டும். “எனக்கு உங்கள் மேல் கோபம்” என்றோ அல்லது “இப்போது நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்” என்றோ சொல்லத் தெரிய வேண்டும். கோபம், மகிழ்ச்சி, சோர்வு, வலி, ஏமாற்றம் போன்று எதுவானாலும் வெளிப்படுத்தும்படியான குடும்பச் சூழலும் இருக்க வேண்டும். இதற்கு பெற்றோர்கள் குழந்தைகளின் லெவலுக்கு மனதளவில் இறங்கி வந்து அவர்களுடன் பேச வேண்டும்.

3. குழந்தைகள் கோபப்படும்போது அவர்கள் எப்படி மாறிவிடுகிறார்கள் என்று கூறுங்கள். அவர்களிடம் கோபத்தைக் கட்டுப்படுத்த, குறைக்க, மனதை வேறு வழியில் திருப்பக் கற்றுக் கொடுங்கள். தங்களைத் தாங்களே கோபத்தின் போது கண்காணிக்கத் தெரிய வேண்டும். கோபம் ஆத்திரமாகி வன்முறையில் முடியக் கூடாது.

4. கோபத்தை தூண்டும்படியான சூழ்நிலையை உருவாக்காதீர்கள். அவர்களின் கோபத்திற்கும், செய்யும் செயல்களுக்கும் அவர்கள்தான் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை சிறுவயதிலேயே அவர்களின் மனதில் விதையுங்கள்.

5. பிறருடன் சுமுகமாகப் பழகும் திறனும், அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறனும் இருப்பவர்களுக்கு கோபத்தைக் கட்டுக்குள் வைக்கும் கலையும் தெரியும். ஆகவே குழந்தைகளின் பிரச்சினைகளுக்கு அவர்களையே தீர்வு காணும்படி சொல்ல வேண்டும். பெற்றோர்களும் அதற்கு உதவலாம்.

6. சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டவாறு எப்படி பொது இடத்தில் கோபத்தைக் கையாள வேண்டும் என்று சொல்லுங்கள். அவர்களின் கம்யூனிகேஷன் திறனை வளர்க்க உதவுங்கள். கோபத்தை எப்படி வெளிக்காட்டுவது என்பதற்கு பெற்றோர்கள்தான் முன்னுதாராணமாக நடந்து காட்ட வேண்டும்.

7. குழந்தைகள் கோபத்தை அடக்கி, ஆக்ரோஷம் வன்முறை என்ற நிலைக்குப் போகாமல் திரும்பும்போது மனதாரப் பாராட்டுங்கள். அவர்களின் வயதுக்குத் தகுந்தவாறு பரிசுகள் கூட கொடுக்கலாம்.

**முடிவுரை**

இந்த உணர்வு சார்ந்த நுண்ணறிவை அதிகம் வளர்த்துக்கொள்ளும் குழந்தைகள் எப்போதும் வெற்றிமேல் வெற்றி பெறுபவர்களாகவும் தாங்கள் சார்ந்துள்ள சமூகத்தால் பெரிதும் விரும்பப்படுபவர்களாகவும் ஆகி விடுகிறார்கள். கோபம் இயற்கையானதாக இருந்தாலும் அளவுக்குமேல் கோபம் வரும்போது உடலும் மனமும் பாதிப்பது உறுதியாகி விடுகிறது. குரங்கிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்து, மேம்பட்டு, வேண்டாத குணங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக அழிந்தொழியும் போது இந்த கோபம் போகாவிட்டாலும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளும் மனிதன் ஒரு பண்பட்ட பிறவியாக மாறி விடுகிறான்.

# ஞானசார தேரர் மீதான வழக்கு; மீள அழைக்க நீதிமன்று உத்தரவு

கொழும்பு, செப். 05

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கை எதிர்வரும் 11ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுக்குமாறு கோட்டை நீதிவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

புனித குர்ஆன் தொடர்பான தவறான மற்றும் போலியான அறிக்கைகளை ஊடகங்களுக்கு வெளியிட் டமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போது, சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லையென பொலிஸாரால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில், பிணையில் உள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார உள்ளிட்ட பிரதிவாதிகள் குழு நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தது. (ஐ)

# மருந்தால் இறந்தவரின் மாதிரிகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டது

கொழும்பு, செப். 05

கொழும்பு தேசிய மருத்துவமனையில் நுண்ணுயிர் கொல்லி மருந்து வழங்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தவரின் உயிரியல் மாதிரிகள் மேலதிக பரிசோதனைகளுக்காக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜி. விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

குறித்த நோயாளருக்கு வழங்கப்பட்ட கோ -அமொக்சிகிளவ் (Co-amoxiclav) என்ற நுண்ணுயிர் கொல்லி மருந்தின் மாதிரிகள் மேலதிக விசாரணைக்காக அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உரிய விசாரணைகளின் பெறுபேறுகள் கிடைத்த பின்னரே மரணத்துக்கான காரணத்தை கண்டறிய முடியும் என அவர் கூறியுள்ளார்.

வெட்டுக் காயத்துக்கு சிகிச்சை பெற்ற 50 வயதான நபரே நுண்ணுயிர் கொல்லி மருந்து வழங்கப்பட்டதை அடுத்து உயிரிழந்தார். (ஐ)

# நீர் மின்சார உற்பத்தி 14வீதமாக அதிகரிப்பு

நீர் மின் உற்பத்தி 14 வீதம் வரை அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்கின்ற போதிலும், நீர் மின் நிலையங்களை சூழவுள்ள பகுதிகளில் குறிப்பிடத்தக்களவு மழை வீழ்ச்சி பதிவாகவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வறட்சியால் நீர் மின் உற்பத்தி கடந்த நாட்களில் 11 வீதத்துக்கும் 12 வீதத்துக்கும் இடையில் வீழ்ச்சியடைந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சமனல வாவியில் ஏற்பட்டுள்ள நீர் கசிவை சீரமைப்பது தொடர்பில் மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம், தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் மற்றும் மின்சார சபையின் பொறியியலாளர்கள் இணைந்து இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் இந்திக அனு ருத்த தெரிவித்தார்.

சமனல வாவியின் 6 இடங்களில் நீர் கசிவு ஏற்பட்டுள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

# கொள்கலன் கட்டண அதிகரிப்பு அமுலானது

கொழும்பு, செப். 05

கொள்கலன் போக்குவரத்து கட்டண அதிகரிப்பு நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது.

எரிபொருள் விலை உயர்வுக்கு அமைய கொள்கலன் போக்குவரத்து கட்டணங்கள் 12.5 வீதத்தால் அதிகரிக்கப்பட்டன என்று ஐக்கிய கொள்கலன் போக்குவரத்து தொழிற்சங்கத்தின் தலைவர் விமலசேன வர்ணசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# லாப்ஸ் எரிவாயு விலையும் உயர்வு




கொழும்பு, செப். 05

லாப்ஸ் எரிவாயுவின் விலையும் 145 ரூபாயால் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 12.5 கிலோ எடையுள்ள எரிவாயுவின் புதிய விலை 3 ஆயிரத்து 835 ரூபாயாகும்.

# ஐ. தே. கவின் மாநாடு ஒத்திவைப்பு



கொழும்பு, செப். 05

எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் நடைபெற விருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று திங்கட் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் பொதுச் செயலாளர் தெரிவித்தார். (ஐ)

